RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 08 செப்டம்பர் 2023 இதழ்:- 17

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# சனல் 4 தயாரித்துள்ள ஆவணப்படம்

## SRI LANKA'S EASTER BOMBINGS: DISPATCHES சொல்லும் செய்தி என்ன?



இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்புலம் தொடர்பான ஆவணப்படத்தை பிரித்தானியாவின் 'சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டது. இந்த ஆவணப்படம் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (3ம்பக்)



Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

## இலங்கையில் இருந்து தப்பியோடிய சி.ஐ.டி முன்னாள் அதிகாரி நிசாந்த டி சில்வா சனல் 4இல் தெரிவித்திருப்பது என்ன?

கோட்டாபய ராஜபக்ச அதிகாரத்தில் இல்லாத காலத்திலும் லசந்த படுகொலை வழக்குகளை நீதிமன்றங்களில் முடக்கி வைப்பதற்கு உதவக்கூடிய பலர் உயர் பதவிகளில் இருந்தனர் என சி.ஐ.டி.யின் முன்னாள் அதிகாரி நிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். சனல் 4 இன் வீடியோவில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (5ம் பக்கம் பார்க்க)



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## தமிழீழத்தின் தேசியப் பாடகர் சாந்தனின் மகன் கோகுலனுக்கு கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கம் கௌரவம்



தமிழீழத்தின் தேசியப் பாடகனாகத் திகழ்ந்த அமரர் சாந்தனின் மகன் கோகுலனுக்கு கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கம் கடந்த 05 செப் 2023 செவ்வாய்க்கிழமை விருந்துபசாரம் ஒன்றை நடத்தியதுடன் மேற்படி சங்கத்தின் தலைவர் திரு கேதா நடராஜா அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசாக தங்க மோதிரம் ஒன்றையும் அணிவித்தார். இந்நிகழ்விற்கு முன்னாள் வர்த்தகர் சங்க உறுப்பினர்கள், ஈழநாடு, உதயன் பத்திரிகை ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு பாராட்டுரைகளைத் தெரிவித்தார். கோகுலன் ஏற்புரை வழங்கினார்.

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah
Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

Team SIVA

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



20 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7

NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd



**Oshawa** **$314,900**

Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University


### Tecumesh Rd E & Hall Ave



**Windsor** **$349,000**

Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors


### Markham & Eglinton



**Scarborough** **$529,900**

Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St



**Mississauga** **$599,000**

Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Bramalea Rd & Queen St



**Brampton** **$590,000**

Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

### Lawrence & Morningside



**Scarborough** **$629,900**

Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area


### York St / Bremmer Blvd



**Toronto** **$610,000**

Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

### Markham Rd & Denison



**Markham** **$635,999**

Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Taunton & Ritson



**Oshawa** **$699,000**

Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

### Main St. E & Russell St.



**Southgate** **$999,000**

Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

### Meadowvale & 401



**Scarborough** **$995,000**

Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Brimley Rd / St. Clair Ave



**Scarborough** **$1,224,900**

Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

### Meadowvale / 401



**Scarborough** **$1,799,995**

Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Bayview & Major Mac



**Richmond Hill** **$1,499,900**

Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### 9th Line/14th Ave



**Markham** **$1,799,000**

Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

### Commercial/Retail




**Grey Highlands** **$7,200,000**

Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

# EELANADU

105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.


அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# SRI LANKA'S EASTER BOMBINGS: DISPATCHES

## சனல் 4 தயாரித்துள்ள ஆவணப்படம் சொல்லும் செய்தி என்ன?





இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்புலம் தொடர்பான ஆவணப்பட த்தை பிரித்தானியாவின் 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்டது. இந்த காணொலி இலங்கையில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

'சனல் 4' வெளியிட்டுள்ள ஆவணப் படத்துக்கு SRI LANKA'S EASTER BOMBINGS: DISPATCHES எனப் பெயரி டப்பட்டுள்ளது. 47 நிமிடங்களும் 9 செக்கன்களையும் கொண்டதாக தயா ரிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணப்படம், ஈஸ்டர் ஞாயிறுதின குண்டு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகள் மற்றும் தாக்குதல் காட்சிகளுடன் ஆரம்பமாகிறது. கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் மற்றும் பலரின் கரு த்துகள் ஆவணப்படத்தில் இணைக்க ப்பட்டுள்ளன.

அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கா வும் நாட்டை தங்களின் கட்டுப்பாட் டின் கீழ் வைத்து கொள்வதற்காகவுமே குறித்த குண்டுத் தாக்குதல்கள் நடத் தப்பட்டன என அந்த ஆவணப் படத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளராக இருந்து தற் போது சுவிற்சர்லாந்தில் புகலிடம் கோரி யுள்ளவரான ஆசாத் மௌலானா பல் வேறு தகவல்களை வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கையின் மூத்த புலனாய்வு தலைவர் ஒருவருக்கு தொடர்பு உள்ளதாக ஆசாத் மௌலானா சனல் 4வின் ஆவணப் படத்துக்கு கருத்து வெளியிட்டுள் ளார்.

'இந்த தாக்குதல்கள் ஓரிரு நாட்களில் திட்டமிட்டு நடத்தப்பட்டதல்ல. இரண்டு மூன்று வருடங்களுக்கு மேல் முழுமையாக திட்டமிடப்பட்டு மேற் கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல். தாக்கு தல் சம்பவம் தொடர்பில் மறுக்க முடி யாத ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க வைக் கொல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ கூறியுள்ளார். அந்தச் சமயத்தில் லசந்தவை 'நாய்' என்று விளித்திருந் தார். மத தீவிரவாதத்தில் ஈடுபட்ட சிறைச்சாலை கைதிகளை சந்தித்து பேச்சு நடத்துமாறு பிள்ளையான் என்னிடம் கூறினார்.

அதற்கமைய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த சஹாரான் ஹாஷி மின் சகோதரர் மௌலவி சைனி ஹாஷிமை நான் சந்தித்தேன். மௌலவி சைனி ஹாஷிம் எமக்கு மிகவும் பயன் படுவார் என பிள்ளையான் என்னிடம் தெரிவித்தார்.

பிள்ளையானின் ஆலோசனையின்படி சட்டத்தரணி ஒருவரை நியமித்து சிறையில் இருந்த மௌலவி சைனி

ஹாஷிமை பிணையில் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். பின்னர் 2018 ஜனவரி அந்தக் குழுவிற்கும் அரச புலனாய்வு சேவையின் தற்போதைய தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே க்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு பிள்ளையான் எனக்கு கட்டளையிட்டார்.

அதன் பின்பு கடந்த 2018 பெப்ரவரி சுரேஷ் சாலேவுக்கும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சைனி ஹாஷிம் மௌலவிக்கும் இடையிலான கலந் துரையாடல் கரடிப்புவல் எனும் இடத் தில் தென்னந்தோப்பு ஒன்றில் அமைந் துள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலுக்கு சைனி ஹாசிம் மௌலவி உள்ளிட்ட ஆறு பேர் வெள்ளை வானில் குறித்த இடத் திற்கு வருகை தந்தனர்.

இக்கலந்துரையாடலில் சுரேஷ்சாலே, ராஜபக்ஷக்களால் நாட்டில் பாதுகாப் பற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியா வதற்கு அதுவே ஒரே வழி எனவும் சுரேஷ் சாலே கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடை பெறுவதற்கு முன்னர் அன்றைய தினம் காலை எனக்கு சுரேஷ் சாலேவிடமி ருந்து தொலைபேசி அழைப்பு வந் தது. தான் மட்டக்களப்பில் இருப்ப தாகவும் என்னை உடனடியாக தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்குச் செல்லும் படியும் கூறினார். அங்கு நபர் ஒருவர் தங்கியிருக்கிறார் என்றும் அவரை உடனடியாக வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வெளியேறுமாறும் சுரேஷ் சாலே என்னிடம் கூறினார்.

மேலும் அந்த நபர் விரும்பும் இடத் தில் இறக்கிவிடுமாறு என்னிடம் சுரேஷ் சாலே கூறினார். நான் அவரை வாகன த்தில் ஏற்ற சென்ற வேளையில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது, அதனை தொடர்ந்து சிறிது நிமிடங் களில் அதாவது 8:50 மணியளவில் சஹ்ரானின் குழு உறுப்பினர் ஒருவரு க்கும் தொலைபேசி அழைப்பு வந்தது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் நான் பிள்ளையானுடன் பேசினேன். என்னை வாயை மூடி மௌனமாக இருக்குமாறு அவர் எச்சரித்தார். உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்ன ணியையும் அனைத்து உண்மை களையும் தெரிந்த என்னை கொலை செய்து விடுவார்கள் என அஞ்சி நான் இலங்கையை விட்டு வெளியேறினேன் ஆஸாத் மௌலானா 'சனல் 4' ஊடகத் துக்கு தெரிவித்துள்ளார்.



மேலும், நாட்டிலிருந்து தப்பிச் சென்ற தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பது இதுவே, முதல் முறை என ஆஸாத் மௌலானா சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த ஆவண படத்தில் இலங்கை யில் நடைபெற்ற யுத்தம் மற்றும் கடந்த 2005ம் ஆண்டு மகிந்த ராஜபக்ச நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றமை போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

யுத்தத்தின் போது ராஜபக்ஷக்களின் ஆட்சியின் கீழ் நடந்த பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் பத்திரிகை யாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்கு தல்கள் உள்ளடங்கிய காணொலிகளும் இடம் பெற்றுள்ளன.

குறித்த ஆவணப்படத்தில் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் கவனம் செலுத் தப்பட்டுள்ளது. இதில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நிய மனங்கள் குறித்தும் உண்மைத் தன்மையை முன் வைக்கின்றது.

ஆவண படத்தின் நிறைவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் உண்மைத்தன்மையை இலங்கை பாராளுமன்றத்தின் சிறப்புக் குழு விசாரணை நடத்தியதாக சனல் 4 தெரி வித்துள்ளது


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com







ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# இலங்கையில் இருந்து தப்பியோடிய சி.ஐ.டி முன்னாள் அதிகாரி நிசாந்த டி சில்வா சனல் 4இல் தெரிவித்திருப்பது என்ன?

கோட்டாபய ராஜபக்ச அதிகாரத்தில் இல்லாத காலத்திலும் லசந்த படுகொலை வழக்குகளை நீதி மன்றங்களில் முடக்கி வைப்பதற்கு உதவக்கூடிய பலர் உயர் பதவிகளில் இருந்தனர் என சி.ஐ.டி.யின் முன்னாள் அதிகாரி நிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். சனல் 4 இன் வீடியோவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சனல் 4 வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தொடர்பான வீடியோவில் கோட்டாபய ஜனாதிபதியான பின்னர் இலங்கையிலிருந்து தப்பியோடிய சிரேஸ்ட புலனாய்வு உத்தியோகத்தர் நிசாந்த சில்வாவும் கருத்து தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை குறித்து விசாரணைகளை மேற் கொண்டிருந்த நிசாந்த சில்வா, அந்த படுகொலையை டிரிபோலி பிளாட்டுன் என்ற இராணுவபுலனாய்வு குழுவினர் செய்தமைக்கான தொலைபேசி ஆதாரங்கள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ச அதிகாரத்தில் இல்லாத போதிலும் (2015–2019 தேர்தல் வரை) லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்குகள் முடக்கப்படுவதை உறுதி செய்வதற்கான நண்பர்கள் உயர்மட்டத்தில் இருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

20 வருடங்களாக நிசாந்த டி சில்வா இலங்கையின் முக்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவராக காணப்பட்டார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்து 2015 இல் அகற்றப்பட்டதும் புதிய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யும் பொறுப்பை நிசாந்த டி சில்வாவிடம் ஒப்படைத்தது. அவர் ஐரோப்பிய நாடுகளின் புலனாய்வு பிரிவினருக்கும் ஹேக்கின் மக்கள் தீர்ப்பாயத்திற்கும் வாக்குமூலங்களை வழங்கியுள்ளார். எனினும் அவர் தனது கதையை ஊடகங்களிற்கு தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவை.

கேள்வி:– ஏன் நீங்கள் இலங்கையில் இருக்காமல் இங்கு வந்திருக்கின்றீர்கள்?

பதில்– எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் இராணுவபுலனாய்வு பிரிவினர் –கடற்படை புலனாய்வு பிரிவினரும் முன்னாள் ஜனாதிபதியும் மரண அச்சுறுத்தல் விடுத்தனர். பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட விவகாரமே நிசாந்த சில்வா கையாண்ட விடயங்களில் முக்கியமானது.

இந்த விசாரணைகளின் போது அவருக்கு கிடைத்த ஆதாரங்கள் மிகவும் மோசமான செயற்பாடுகளிற்காக பெயர் பெற்ற திரிபோலி பிளாட்டுன் குறித்து அவர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தின.

நான் திரிபோலி குழுவை சேர்ந்த ஐந்து நபர்களின் தொலைபேசி இலக்கங்களை கண்டு பிடித்தேன் அந்த தொலைபேசி இலக்கங்கள் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டன என நிசாந்த தெரிவித்தார். நான் தொலைபேசி ஆவணங்கள் உட்பட பல விடயங்களை ஆராய்ந்தேன் இடங்களை கண்டு பிடிக்க முயன்றேன் என நிசாந்த சனல் 4 க்குதெரிவித்தார்

அவர் கண்டுபிடித்த ஆதாரங்கள் லசந்த படுகொலை செய்யப்பட்ட அன்று காலை அவரது வீட்டிலிருந்து திரிபோலி குழுவை சேர்ந்தவர்கள் அவர் கொல்லப்படும் இடம் வரை பின் தொடர்ந்ததை உறுதி



செய்தன. பலர் கோட்டாபய ராஜபக்சவே லசந்த படுகொலையின் பின்னணியில் இருந்தார் என சந்தேகப்படுகின்றனர். தொலைபேசி உரையாடல்கள் குறித்த ஆவணங்களை ஆராய்ந்து அந்த சந்தேகம் சரியானது என் பதை உறுதி செய்தவர் நிசாந்த. ஆகவே நான் கோட்டாபய ராஜபக்சவை சிஐடிக்கு அழைத்தேன் என அவர் தெரிவித்தார்.

அது ஒரு துணிச்சலான நடவடிக்கை – அதிகாரத்தில் இல்லாத போதிலும் கோட்டாபய ராஜபக்ச அச்சத்தை ஏற்படுத்தும் நபராக காணப்பட்டார் முக்கிய இடங்களில் செல்வாக்கு உள்ள நண்பர்கள் அவருக்கு இருந்தனர்.

கோட்டாபய ராஜபக்ச என்னிடம் நீர் ஏன் என்னை லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் சந்தேக நபர் என குறிப்பிட்டுள்ளீர் எனக் கேட்டார் என நிசாந்த் தெரிவித்தார். அதற்கு நான் தேவையற்ற விடயங்களை செய்யவில்லை தேவையான விடயங்களை மாத்திரம் செய்கின்றேன் என தெரிவித்தேன் நீங்கள் யார் என்பது குறித்து எனக்கு கவலையில்லை என தெரிவித்தேன் எனவும் நிசாந்த தெரிவித்தார். நான் உங்களை சந்தேக நபராக பெயரிட்டுள்ளேன் என தெரிவித்தேன் கோட்டாபய என்னை பற்றி அதிருப்தியடைந்தவராக காணப்பட்டார் என நிசாந்த தெரிவித்தார்.

இதேவேளை சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை நாய் என தெரிவித்து அவரை கொலை செய்யவேண்டும் என கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானா சனல் 4 க்கு தெரிவித்துள்ளார்.

மிக் விமான கொள்வனவில் இடம் பெற்ற மோசடி தொடர்பில் லசந்த விக்கிரமதுங்க செய்திகளை வெளியிட்டமை கோட்டாபய ராஜபக்சவை கடும் சீற்றத்திற்குள்ளாக்கியது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார். பிள்ளையானையும் என்னையும் அவசர சந்திப்பிற்கு அழைத்த கோட்டாபய ராஜபக்ச லசந்தவிக்கிரமதுங்க கொலை செய்யப்பட வேண்டும் என தெரிவித்தார் என சனல் 4க்கு ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

இந்த நாய் எப்போதும் என்னுடன் மோதுகின்றது இந்த நாயை கொலை செய்ய வேண்டும் உங்களால் முடிந்தளவு வேகமாக அதனை செய்யுங்கள் என கோட்டாபய தெரிவித்தார் எனவும் மௌலானா தெரிவித்துள்ளார்.


## ஸ்ரீ ஐயப்ப சமாஜ அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் / தேர்தல் 2023

**ஸ்ரீஐயப்ப சமாஜம் ஒவ் ஒன்ராறியோவின் 28வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெறும்.**

**2023ம் ஆண்டுக்கான நான்கு நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்) 04 நவம்பர் 2023 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பகல் 2.00 மணி வரை ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம் 2இல் இடம்பெறும்.**

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

416 321 6104 / 416 321 7558


# விதுர விக்ரமநாயக்காவின் அறிவு

தென்னிலங்கையின் பெரும்பாலான அரசியல்வாதிகள் சிங்கள மக்களுக்கு உண்மைகளை கூற முடியாதவர்களாகவே இருக்கின்றனர். மக்களுக்கு உண்மைகளை கூற வேண்டுமாயின் முதலில் அவர்கள் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வர வேண்டும். வடக்கு, கிழக்கில் ஏன் விகாரைகளை நிர்மாணிக்கக்கூடாது இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்கு இந்து ஆலயங்கள் உள்ளன. அவ்வாறாயின் வடக்கு, கிழக்கில் விகாரைகளை நிர்மாணிப்பதில் என்ன பிரச்னை?

வடக்கு, கிழக்கில் விகாரைகளை நிர்மாணிக்கக்கூடாதென்று சட்டம் இருக்கின்றதா – இவ்வாறு புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

மேலோட்டமாக பார்த்தால், அமைச்சர் கூறுவது சரி போல் தெரியலாம். 25 மாவட்டங்களிலும் – தமிழ் மக்களுக்கு ஆலயங்கள் இருக்கின்றபோது வடக்கு, கிழக்கில் சிங்கள மக்களுக்கு விகாரைகள் அமைக்கப்படுவதை ஆட்சேபிப்பது நியாயமற்ற ஒரு செயலாக தெரியலாம். ஆனால், விடயத்தை ஆழமாக நோக்கினால், அமைச்சர் அறிவுக்கு பொருத்தமில்லாத வகையில் பேசுவதைக் காணலாம்.

தமிழர் தரப்பிலிருந்து இது தொடர்பில் அறிவு பூர்வமான பதில் வழங்கப்படவில்லை. ஈழம் சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் மட்டுமே அறிவுபூர்வமாகவும் தெளிவாகவும் பதிலளித்திருக்கின்றார்.

அவரின் அறிக்கையானது, புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் கூற்றிலுள்ள அபத்தத்தை அம்பலப்படுத்துகின்றது. தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு ஆலயங்கள் இருக்கின்றன – அங்கு தேர்த் திருவிழாவும் நடைபெறுகின்றது. சிங்கள மக்களும் அதில் பங்கு கொள்கின்றார்கள்.

இதேபோன்று வடக்கு, கிழக்கிலுள்ள பிரபலமான ஆலயங்களுக்கு சிங்கள மக்கள் வந்து செல்கின்றனர். அவர்கள் இந்துக் கடவுள்கள் மீது பக்தியுடன் இருக்கின்றனர். தமிழ் மக்களும் பௌத்தத்தை எதிர்க்கவில்லை. மாறாக மதிக்கின்றனர்.

அம்பேத்கரின் வார்த்தையில் கூறுவதானால், பௌத்தம் ஒரு மதமே அல்ல மாறாக அது ஒரு தத்துவம். இன்றும் சில சிந்தனையாளர்கள் – குறிப்பாக, தலித்திய சிந்தனையாளர்கள் சிலர் பௌத்தத்தை விடுதலைக்கான மார்க்கமாக முன் வைக்கின்றனர்.

இங்கு பௌத்தத்தின் மீதான வெறுப்பு என்று ஒன்றில்லை. அடிப்படையில் இது மதப் பிரச்னையும் அல்ல. மாறாக இது ஓர் அரசியல் பிரச்சனை. தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தின் விளைவாகவே புதிய விகாரைகள் சிக்கலுக்குரியவையாக நோக்கப்படுகின்றது.

கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு விகாரைகளின் விரிவாக்கம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், வடக்கிலும் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற நோக்கம் இருகின்றதா – என்னும் அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

தென்னிலங்கையில் எந்தவொரு புதிய ஆலயங்களையும் தமிழ்மக்கள் நிர்மாணிக்கவில்லை. அவ்வாறான தேவைகளும் தமிழ்மக்களுக்கு இல்லை. வரலாற்றில் பின்நோக்கி சென்றால் சைவர்களே இலங்கைக்கு உரிமை கோரும் தகுதியுள்ள மக்கள். அந்த மக்களில் ஒரு பகுதியினர், குறிப்பிட்ட காலத்தில் பௌத்தத்தையும் தழுவியிருக்கின்றனர்.

அதன் எச்சங்கள் வடக்கு – கிழக்கில் இருக்கின்றன. திருகோணமலையிலுள்ள வில்கம் விகாரையிலிருந்து, குருந்தூர்மலை வரையில் தமிழ் பௌத்தத்தின் எச்சங்கள் இருக்கலாம். ஆனால், இலங்கையின் தொல்லியல்துறையோ இந்தக் கண்ணோட்டத்தில் விடயங்களை நோக்கவில்லை. வெறுமனே விடயம் சிங்கள – தமிழ் விவகாரமாக மட்டுமே நோக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் அச்சம் நியாயமானது. அந்த அச்சத்தை புரிந்து கொண்டால் இந்தப் பிரச்சனையை இலகுவாக கையாள முடியும். ஆனால் இந்த விடயத்தை பரந்த கண்ணோட்டத்தில் நோக்குவதற்கு புத்தசாசன அமைச்சரும் தயாராக இல்லை தென்னிலங்கையின் அரசியல்வாதிகளும் தயாராக இல்லை. இது பற்றிப் பேசினால், எங்கு தங்களின் வாக்கு வங்கி பாதிக்கப்பட்டு விடுமோ என்றே அனைவரும் யோசிக்கின்றனர். பிரச்சனை இங்கு தான் இருக்கின்றது

# வேலணை மத்திய கல்லூரியில் அரும்பெருந் தொண்டாற்றிய ஆசிரியை திருமதி அழகரட்ணம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி!



வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி புஸ்பராகம் மனோலயம் அழகரட்ணம் அவர்கள் 04-09-2023 திங்கட்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தினார். அன்னாரது நல்லடக்கம் 06-09-2023 புதன்கிழமை நடைபெற்றது.

ஈழ தேசத்தின் கலாச்சாரத் தலைநகராகத் திகழும் யாழ் நகரில் திரு திருமதி சிதம்பரப்பிள்ளை தம்பதியினருக்கு இளைய மகளாக 21-09-1934ஆம் திகதி பிறந்தவர் திருமதி அழகரட்ணம் அவர்கள். இவர் யாழ் நகரின் தெற்குப் பக்கத்திலுள்ள மண்டைதீவைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஆங்கிலப் பாடத்திலும் உடற்பயிற்சிப் பாடத்திலும் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியையான அன்னார் வேலணை மத்திய கல்லூரியில் 1967 இலிருந்து 1982 வரை 15 ஆண்டுகள் கடமையாற்றிய பெருமைக்குரியவர். தனது பெயரைப் போலவே அழகான இரத்தினமாகத் திகழ்ந்தவர் என்றால் அது மிகையல்ல. மாணவர்களாலும் சக ஆசிரியர்களாலும் மதிக்கப்பட்ட கல்லூரியின் புகழ் பெற்ற ஆசிரியர்களில் இவரும் ஒருவர். தனது பதவிக் காலத்தில் பெரும்பாலான காலம் உடற்பயிற்சி ஆசிரியராகவே பணி புரிந்தார். இன்றைய காலத்தைப் போல அக் காலத்திலும் ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தனர். இவர் ஆங்கிலப் பாடத்திலும் பயிற்சி பெற்றிருந்தமையால் சில வகுப்புக்களுக்கு ஆங்கிலப் பாடஆசிரியராகவும் செயற்பட்டார். இவை மட்டுமல்ல கல்லூரியின் பரிசளிப்பு விழாக்கள் இல்ல விளையாட்டுப் போட்டிகள் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இவரது பங்களிப்பு அளப்பரியது. பாடசாலை அணிகள் பெற்ற வெற்றிகளினால் மாணவர்களின் தன்னம்பிக்கை அதிகரித்ததுடன் மற்றைய பாடங்களிலும் உற்சாகமும் ஆர்வமும் பெருகியது. எந்தவொரு செயலைச் செய்வதாக இருந்தாலும் அதனை முழு ஈடுபாட்டுடன் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது பெரிய அளவில் முத்திரை பதிக்கக்கூடிய செயலாக அது அமையும். இது அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் திருமதி அழகரட்ணம் அவர்கள்.

தனது பணியில் தனக்கெனத் தனி முத்திரை பதித்தார். மாணவர்கள் அனைவரையும் சமமாகப் பேணியது மட்டுமல்லாமல் அவர்களைத் தனது பிள்ளைகள் போலவே நடாத்தி ஒழுக்கத்தையும் கல்வியையும் ஒருங்கே ஊட்டி வளர்த்தார். ஆசிரியத் தொழிலின் உயர்ந்த பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தவர்களில் ஒருவர் என்ற சிறப்பையும் பெற்றார். நான் அறிந்தவரை வெளிநாடுகளிலிருந்து தாயகம் செல்லும் இவரது மாணவிகள் இவரைத் தேடிச்சென்று சந்தித்து மகிழ்ந்ததோடு தமது நன்றி மறவாத் தன்மையையும் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இவரது வீடு நல்லூரடியில் மருதடி ஒழுங்கையில் இருந்தது. அது போலவே பாடசாலையில் இவரது வகுப்பும் மருத மரத்தடியிலேயே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

1961-62 காலப்பகுதியில் படித்த மாணவர்களில் விவசாயப் பாடம் எடுத்த மாணவர்களால் நடப்பட்டதே மேற்குறிப்பிட்ட மருத மரம். இதனை நண்பர்களின் துணையுடன் நட்டவர் தற்போது கனடாவில் வதியும் நாரந்தனையைச் சேர்ந்த பழைய மாணவர் திரு சொர்ணலிங்கம் அவர்கள். இவருக்குத் துணையாக இருந்தவர்களில் எனக்குத் தெரிந்தவர்கள் கனடாவில் வதியும் ஆசிரியர் திரு கா. பூபாலசிங்கம் மற்றும் நாரந்தனையைச் சேர்ந்த திரு சு. செல்வரெத்தினம் முதலானோர். இந்த மருதமரத்தின் வயது 60 ஆண்டுகளுக்கு மேல் என்பதனையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

திருமதி அழகரட்ணம் அவர்கள் சுறுசுறுப்பாகவும் கலகலப்பாகவும் நடந்து திரிந்த மருதமர நிழலும் நிலமும் அப்படியே தான் இருக்கிறது. அங்கே பரந்து கிடக்கும் அவரது காலடிச் சுவடுகள் அவர் பெயரைப் பாடிக் கொண்டே இருக்கின்றன. அந்த மரத்தடியே அவரது வீடு. மாணவர் நலனே அவரது உயிர் மூச்சு என ஆடம்பரமில்லாமல் ஆர்ப்பாட்டமில்லாமல் தன்னிச்சையாகப் பாடுங் குயில் போல இயற்கையோடு சேர்ந்து எமது பாடசாலையில் 15 ஆண்டுகள் இயங்கிக் கொண்டிருந்தவர் திருமதி அழகரட்ணம் அவர்கள். ஓய்வு பெற்ற பின்னரும் பாடசாலை விழாக்களில் அழைக்கும் போதெல்லாம் சலிப்பின்றிப் பங்கு பற்றித் தானும் மகிழ்ந்து பாடசாலைச் சமூகத்தையும் மகிழ்வித்தவர்.

மருதடி ஒழுங்கையில் கல்லூரியின் முன்னாள் அதிபர்களில் ஒருவரான காலஞ்சென்ற திரு இராஜநாயகம் அவர்களது வீடும் அன்னாரது வீடும் அருகருகே இருந்தமையால் திருமதி கமலாம்பாள் இராஜநாயகமும் அன்னாரும் நெருங்கிப் பழகிய அனுபவம் பற்றி திருமதி கமலாம்பாள் என்னிடம் ஆசிரியையின் மற்றவருக்கு உதவுங் குணத்தை வியந்து பாராட்டியதுடன் தான் 2020 இல் கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற போது மானிப்பாய் சென்று திருமதி அழகரட்ணம் அவர்களைச் சந்தித்த அனுபவத்தைக் கண்ணீர் மல்கக் கூறினார்.

என்னைப் பொறுத்தவரை ஆசிரியையிடம் படித்த அனுபவம் இல்லா விட்டாலும் அவருடன் பழகும் வாய்ப்பு இவரது இறுதிக் காலம் வரை இருந்தது. அன்னாரது பெறா மகன் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமான திரு தி. கதிர்காமநாதன் அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் எனது சிரேஸ்ட மாணவராக இருந்தவர். கதிர்காமநாதன் அவர்களே அன்னாருக்கும் எனக்குமான உறவுப்பாலமாகவும் இருந்தார் இவரது இழப்பால் துயருற்றிருக்கும் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆசிரியை அவர்களது ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமானை வேண்டுகின்றேன். ஓம் சாந்தி !

சி.இளஞ்செழியன் பழைய மாணவர் (1975-1982) வேலணை மத்திய கல்லூரி


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# சிங்கப்பூரின் தெளிவான தொலை நோக்குப் பார்வை தர்மன் சண்முகரத்தினம் என்ற தமிழர் ஜனாதிபதி!



தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்தினம், சிங்கப்பூரின் ஒன்பதாவது, ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கின்றார். சிங்கப்பூர் பல்வேறு இனக் குழுக்களைக் கொண்டிருக்கும் நாடு. பிரதான இனக் குழுவாக சீனர்களே இருக்கின்றனர்.

சிங்கப்பூரின் சிற்பியென்று வர்ணிக்கப்படும், காலம் சென்ற லீ குவான் யூவின் தூரநோக்கும், ஆளுமையான தலைமைத்துவத்தின் விளைவாகவே, ஒரு தமிழர் அந்த நாட்டில் ஜனாதிபதியாக வரமுடிந்திருக்கின்றது.

இதிலுள்ள ஆச்சரியமான விடயம் ஒரு காலத்தில், இலங்கை போன்று சிங்கப்பூரை, கட்டியெழுப்ப வேண்டுமென்னும் கனவை லீ குவான் யூ வெளிப்படுத்தியிருந்தார். அந்தளவுக்கு இலங்கை அன்றைய சூழலில் ஆசியாவில் முன்னுதாரணம் மிக்க நாடாக இருந்தது.

ஆனால் பிற்காலத்தில், நல்லவேளைஇலங்கை போன்றதொரு ஆபத்துக்குள் சிக்கி விடவில்லையென்று லீ குவான்யூ எண்ணிக் கொள்ளுமளவிற்கே, இலங்கையின் நிலைமைகள் தரம் தாழ்ந்து போனது.

சிங்கப்பூரின் இன்றைய வளர்ச்சிக்கும் எழுச்சிக்குமான அடிப்படையான காரணம் என்ன? நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட, லீ குவான் யூ ஒரு விடயத்தில் உறுதியாக இருந்தார். அதாவது, இனவாத, மதவாத சிக்கலுக்குள் ஒரு போதும் சிங்கப்பூர் விழுந்து விடக்கூடாது.

அவ்வாறு விழுந்தால் சிங்கப்பூர் ஒருபோதுமே முன்னேற முடியாது. இதற்கான தலைமைத்துவத்தை வழங்குவது பற்றி மட்டுமே அவர் சிந்தித்தார் அந்த அடிப்படையில் மட்டுமே முன்னேறினார்.

இன்று சிங்கப்பூர் அனைத்து இன மக்களையும் ஒரு மக்களாகக் கொண்டு, முன்னேறிய நாடாக திகழ்கின்றது. அரசியல்வாதிகளை, அவர்களது திறமையின் அடிப்படையில் மட்டுமே, மக்கள் தீர்மானிக்கின்றனர்.

அவர் சீனரா, தமிழரா என்றெல்லாம் அங்கு பாகுபாடுகள் இல்லை. இதன் காரணமாகவே சிங்கப்பூரால் பொருளாதார நிலையில் உயர்ந்து நிற்க முடிகின்றது.

ஒரு காலத்தில் சிங்கப்பூருக்கு முன்னுதாரணம் மிக்க நாடாக திகழ்ந்த, இலங்கைத் தீவோ, இனவாத, மதவாத சிக்கலுக்குள் சிக்கி, சின்னாபின்னமாகியதன் விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

இனங்களுக்கிடையிலான பிரச்னைகளை ஆக்கபூர்வமாக தீர்த்துக் கொள்ளும் பொறிமுறையற்ற அரசியலால், உள்நாட்டு யுத்தமொன்றிற்கு முகம் கொடுத்து, அந்த யுத்தத்தில் வெற்றிபெறுவதற்காக உலகெங்கும் கடன்களை வாங்கி, மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, அதிலிருந்து மீள்வதற்காக நாடுகளின் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றது.

ஆனால் இந்த நிலையில் கூட, கற்கால சிந்தனையுள்ள இனவாத மற்றும் மதவாத சக்திகளின் பிடியிலிருந்து வெளியில் வர முடியாமல் இருக்கின்றது.

கற்கால சிந்தனையை பாதுகாப்பது பற்றித் தான் இப்போதும் சிங்கள அரசியல்வாதிகள் சிந்திக்கின்றனர். சிங்கள ஆட்சியாளர்களை பொறுத்தவரை நாட்டை முன்னேற்ற பாதையில் வளர்ப்பதை விடவும், தமிழ் மக்களை இரண்டாம் நிலையில் வைத்துக் கொள்வதை மட்டுமே தங்களின் ஒரேயொரு அரசியல் வேலைத்திட்டமாகக் கொண்டிருந்தனர்.

அது இன்றுவரையில் தொடர்கின்றது. இப்போதும் இந்த நாடு யாருக்கு சொந்தமானதென்னும், கற்கால விவாதத்திற்குள் தான், சிங்கள ஆட்சியாளர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் சிங்கப்பூரில் இன்று நிகழ்ந்திருப்பது இலங்கையில் எப்போதோ நடந்திருக்க வேண்டும். ஒரு பல்லின நாடாக இலங்கையை பாதுகாத்திருந்தால், அனைத்தின மக்களினதும் சரிசம பங்களிப்புடன், இலங்கைத் தீவு உலகில் தலைசிறந்த நாடாக திகழ்ந்திருக்கும். ஆனால் இன்றோ, நிலைமை தலைகீழாகி விட்டது.

சிங்கப்பூரின் வளர்ச்சியை, அதன் முன்னேற்றத்தை, அந்த நாட்டு மக்களின் ஒற்றுமையை பெருமூச்சுடன் நோக்கும் நிலையிலேயே இலங்கையர்கள் இருக்கின்றனர். பல்லினங்களை கையாளும் அறிவுப் பெட்டகமாக சிங்கப்பூர் திகழ்கின்றது.

அறிவை தொலைத்து, வெறும் இனவாதத்திற்குள் சிக்குப்பட்டுக் கிடக்கும் நாட்டுக்கு உதாரணமாக, இலங்கை திகழ்கின்றது.

# வாழிய யாழ்.நகர் இந்துக்கல்லூரி!

## கணித விஞ்ஞானப் பிரிவில் 31 மாணவர்கள் 3ஏ சித்தி




04 செப்டம்பர் 2023 வெளியான உயர்தர பரீட்சை பெறுகளின் முடிவின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பாடப் பிரிவுகளில் 31 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். அத்துடன், பௌதிக விஞ்ஞான பாடத்தில் யாழ்ப்பா. ணம் மாவட்டத்தில் முதல் 6இடங்களையும் உயிரியல் விஞ்ஞான பாடத்தில் மாவட்டத்தில் முதல் 5 இடங்களையும் இந்துக் கல்லூரியின் மாணவர்களே பெற்றுள்ளனர்.

2022 ஆண்டு உயர்தர பரீட்சை முடிவுகள் வெளியாகின. கிடைக்கப் பெற்ற முடிவுகளின்படி, யாழ். இந்துக் கல்லூரியில் பௌதிகவிஞ்ஞான பிரிவில் 21 மாணவர்கள் 3 ஏசித்தி பெற்றனர். இதில், சிறீ.சிநேகன் லெ.அபிசேக், ச. அபிசேகன், ப. தீபக், மு. முகமட் இஷாத், வி. கிஷாலன் ஆகியோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் ஆறு இடங்களைப் பெற்றனர்.

இதேபோன்று உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் 10 மாணவர்கள் 3 ஏ சித்திபெற்றனர். இதில், அ. வித்யாசாகர், க.பவித்ரன், நா. சாரங்கன், த. அமலன், ர.தனுசன் ஆகியோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் 5 இடங்களைப்பிடித்தனர்.

இதேவேளை உயர்தர பரீட்சையில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியை சேர்ந்த 14 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியை சேர்ந்த 10 மாணவர்கள் பௌதிக விஞ்ஞான (கணிதம்) பாடத்தில் 3 ஏ சித்திபெற்றனர்.

இதேபோன்று, உயிரியல் விஞ்ஞான பாடத்தில் மூன்று மாணவர்களும் வர்த்தக பிரிவில் ஒரு மாணவரும் 3 ஏ சித்திகளை பெற்றுள்ளார்.

இதேசமயம், பொறியியல் தொழில்நுட்ப பாடத்தில் அன்பழகன் திவான்பிரபாகர் 2 ஏ, பி சித்தி பெற்று யாழ்.மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

### முல்லைத்தீவில் இறுதிப் போரில் தந்தையை இழந்த மாணவி 3 ஏ சித்தி

இறுதிப் போரில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த டொறின் ரூபகாந்தன் என்ற மாணவி வர்த்தக பாடத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

உயர்தர பரீட்சைமுடிவுகள் வெளியாகின. இதில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவியான டொறின் ரூபகாந்தன் வர்த்தக பிரிவில் 3 பாடங்களிலும் 3 ஏ சித்தி பெற்றார்.

# தேவை:- தந்திரோபாய அணுகுமுறை

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் பொருட்படுத்தப்படாத சில அரசியல்வாதிகள் அவ்வப்போது தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் தலையை வெட்டப் போவதாக ஒருவர் கூறுகின்றார். மறுபுறம் குருந்தூர்மலையை வைத்து சரத் வீரசேகரவும் உதய கம்மன்பிலவும் அரசியல் செய்கின்றனர். அவ்வப்போது சவால் விடும் வகையில் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்துக்கு முன்னால் கம்மன்பில போராட்டம் நடத்துவதாக கூறுகின்றார். வடக்குக்குத் துரத்தியடிப்போம் என்கின்றார்.

இதற்கு தமிழர்தரப்புகள் பதிலளித்துக் கொண்டிருப்பதும் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துகளை முன்வைப்பதும் சரியானதா? அண்மைக்காலத்தில், குருந்தூர்மலை விவகாரம் மற்றும் தையிட்டி விகாரை விவகாரத்தை முன்வைத்தே அனைவரும் பேசி வருகின்றனர்.

குறிப்பாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் குறித்த பிரச்சனைகளுக்கு தலைமை தாங்குவதான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் மூலம் பௌத்த ஆக்கிரமிப்பு என்பதே பிரதான பிரச்னையாகக் காண்பிக்கப்படுகின்றது.

ஆனால், அவற்றைத் தடுத்து நிறுத்தும் எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. ஆனால், அரசியல்வாதிகளோ தங்களின் வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொள்வதற்காக அவற்றை பயன்படுத்தி வருகின்றனர்.

தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் காலத்துக்குக் காலம் இவ்வாறான தமிழர் விரோத குழுக்கள் தலைநீட்டுவதுண்டு. இவ்வாறான தரப்புகளை ஆட்சியாளர்களோ தங்களின் தட்டிக் கழிக்கும் அரசியல் தந்திரோபாயத்துக்கான கருவியாகப் பயன்படுத்திக் கொள்வதும் உண்டு.

தமிழர் விரோதத்தை கையிலெடுக்கும் தரப்புகள் அனைத்துமே தென்னிலங்கையில் ஆரோக்கியமான அரசியலை முன்னெடுக்க முடியாத அதனை அறியாத தரப்புகள் தான். சிங்கள மக்களுக்கு கூறுவதற்கு அவர்களிடம் எதுவுமில்லை. இவ்வாறானதொரு சூழலில் தான், வெறும் இனவாதத்தில் சரணடைகின்றனர். கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியால் சிதறிப் போன தீவிர இனவாத தரப்புகள் அனைத்தும் தற்போது பௌத்த மதத்துக்கு ஆபத்தென்னும் சுலோகமொன்றை கையிலெடுத்திருக்கின்றனர்.

இவர்களுக்கு தீனி போடும் வகையில் தமிழ்த் தேசிய தரப்புகள் செயல்படுவது புத்திசாலித்தனமானதல்ல. தீவிர இனவாத தரப்புகளின் இலக்கு ஒன்று தான் அதாவது, வீழ்ச்சியடைந்து செல்லும் தங்களின் செல்வாக்கை மீளவும் கட்டியெழுப்புவது.

இதற்கான வாய்ப்பாகவே அவர்கள் வடக்கில் மேற்கொள்ளப்படும் விகாரை நிர்மாணங்களை கையிலெடுத்திருக்கின்றனர். இவற்றை வெறும் எதிர்ப்பு என்னும் நோக்கில் மட்டும் தமிழர் தரப்புகள் கையாளும் போது, அந்த எதிர்ப்பை, சிங்கள மக்களுக்கு எதிரான ஒன்றாக சித்திரிப்பதன் ஊடாகத் தங்களை மீளவும் மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்கவர்களாக உருமாற்றிக் கொள்வதே அவர்களின் பிரதான தந்திரோபாயமாகும்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம் அவ்வாறாயின் அவர்கள் செய்வதை தமிழர்கள் அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா இதனைத் தடுப்பதற்கு தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் செயல்படக் கூடாதா? செயலாற்ற வேண்டும்.

ஆனால், எங்கள் செயல்பாடுகளால் ஏற்படும் முழு நன்மையும் -சிங்கள அடிப்படைவாத தரப்புகளுக்கான நன்மையாகிவிடக்கூடாது. குருந்தூர்மலை மற்றும் தையிட்டி விவகாரத்தின் போது காண்பிக்கப்படும் சிறு குழு எதிர்ப்பின் நன்மையை சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளே அறுவடை செய்கின்றனர். எனவே, இந்த விடயங்களை எதிர் கொள்வதற்கான பொதுவான பொறிமுறையொன்று அவசியம்.

ஒரு கட்சி இதனை முன்னெடுப்பதாக காண்பிப்பது ஆபத்தானது. அனைவரும் ஓரணியாக இந்த விடயத்தை முன்னெடுக்க வேண்டும் அதே வேளை, ஏட்டிக்குப் போட்டியான விடயமாக இதனை அணுகக் கூடாது. இதேவேளை, வேறு எவ்வாறான அணுகுமுறைகளில் இந்த விடயத்தைக் கையாள முடியுமென்று ஆராய வேண்டும். தென்னிலங்கையிலுள்ள தாராளவாத சிங்கள சிவில் சமூக தரப்புகளுடன் இது தொடர்பில் உரையாட வேண்டும். எதிர்க்கட்சியினரும் இந்த விடயத்தில் தலையீடு செய்யும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

# 13வது திருத்தச் சட்டம் அரசியலமைப்பிலேயே இல்லை! இந்தியாவுக்கும் இது தெரியும் பகிரங்க விவாதத்திற்கு தயார் - கஜன்

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பிலேயே இல்லை . இது இந்தியாவுக்கும் தெரியும். இந்த விடயம் தொடர்பாக பகிரங்க விவாதத்துக்கும் நான் தயாராகவுள்ளேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம். அத்துடன், 13ஆவது திருத்தம் தீர்வல்ல என்று தமிழ்த் தரப்புகளாலேயே சொல்லப்படுகின்றது.

இனப் பிரச்னைக்கு தீர்வை ரணில் விக்கிரமசிங்க கொடுப்பதாக உலகத்துக்குக் காட்டிக் கொள்ள வேண்டிய நேரத்தில் நாம் ஏன் 13ஆம் திருத்தத்தைப் பற்றிக் கதைக்க வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியின் 'ஸ்பொட்லைற்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில், அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு.

13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பிலேயே இல்லை. 13 அரசமைப்பில் இருக்கிறதா இல்லையா என்று ஆய்வு செய்யக்கூடிய அது சம்பந்தமாக முடிவாக சொல்லக்கூடியது உச்சநீதிமன்றம். அந்த உச்சநீதிமன்றம் 1987ஆம் ஆண்டே தனது தீர்ப்பில் அதிகாரப் பகிர்வு ஒற்றையாட்சிக்குள் கிடையாது என்று சொல்லியுள்ளது. 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் அதிகாரப் பகிர்வு கிடையாது. அதிகாரங்கள் முழுக்க முழுக்க கொழும்பின் (மத்திய அரசின்) கையிலேயே இருக்கும்.

அந்த 9 நீதியரசர்கள் கொண்ட



(பெரும்பான்மையானவர்களின்) தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு கிட்டத்தட்ட 30 தீர்ப்புகள் வந்துள்ளன. இதில், 2014ஆம் ஆண்டு சோழமுத்து இராசனின் வழக்கில் பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்பில் மத்திக்கும் மாகாணத்துக்கும் இடையிலே 13ஆம் திருத்தத்தில் முரண்பாடு வரமுடியாது.

ஏனென்றால், சட்டம் மிகத் தெளிவு மத்தியின் கையில் மட்டுமே அதிகாரம். மாகாணத்துக்கு அதிகாரம் கிடையாது. காணி அதிகாரம் தொடர்பிலேயே மிக விசேடமாக இந்தத் தீர்ப்பு அமைந்தது. தீர்ப்புகள் இப்படி மிகத் தெளிவாக சொல்லப்பட்டுள்ள நிலையிலே 13ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சொல்வது அப்பட்டமான பொய். அதை சொல்வதற்கான காரணம் 13ஆம் திருத்தம் நடைமுறையில் தான் இருக்கிறது. உள்ளே தான் இருக்கிறது என்று வெளியில் சொன்னால், 13இல் ஒரு பிரயோசனமும் இல்லை என்று மக்களே விளங்கிக் கொள்வார்கள் என்பது தான்.

இதன்போது குறுக்கிட்ட நெறியாளர்கள், ஆனால் 13இன் ஊடாக பல விடயங்களை தடுத்துள்ளோம். காணி, பொலிஸ் அதிகாரத்தை தந்தால் சில வற்றை செய்யலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலர் இந்த விடயங்களை ஏற்றுக் கொள்கிறார்களே என்று கேட்டபோது,

அவர்களை என்னுடன் விவாதிக்க வையுங்கள். என்னையும் வைத்துக் கொண்டு சொல்லட்டும் – அவர்கள் கூறும் அப்பட்டமான பொய்யை நேரடியாக தட்டிக் கேட்க ஒருவரும் இல்லாமல் பொய்யை ஏற்கிறார்கள். விவாதம் நடந்தால் தெரியும். ஆனால், இதனை நான் மட்டும் கதைக்கும் போது பொய்யாக தெரியலாம் என்றவர், 1987 உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும், 2014 சோழமுத்து இராசன் தனது காணி தொடர்பில் தொடுத்த வழக்குகளின் தீர்ப்பையும் வாசித்துக் காட்டினார். தொடர்ந்து, உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்த பிறகு மற்றவர்கள் கூறும் விடயத்தைக் கணக்கெடுக்கத் தேவையில்லைஎன்றார்.

இதைத் தொடர்ந்து, 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தும் இந்தியாவுக்கும் இந்த விடயம்தெரியாதா என்று நெறியாளர் கேட்கையில்,

இது இந்தியாவுக்கும் தெரியும். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பில் தமிழ் கட்சிகளை சந்தித்தார். இலங்கைக்கான இந்தியத் தூது வரும் உடன் இருந்தார். அப்போது இந்த விடயங்களை நான் அவர்களுக்கு சுட்டிக் காட்டினேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனை மறுதலிக்க வில்லை. அப்போது அங்கிருந்த சுமந்திரன் உள்ளிட்டவர்களும் நான் கூறுவது தவறு என்று சுட்டிக்காட்டவில்லை.

13ஐ வலியுறுத்தும் தரப்புகளே 13 தீர்வல்ல என்று சொல்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு தீர்வைக் கொடுப்பதாக உலகத்துக்குக் காட்டிக் கொள்ள வேண்டி நேரத்தில் நாம் 13ஆம் திருத்தத்தை பற்றி ஏன் கதைக்க வேண்டும் என்றும் கேட்டார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4 காணொளியில் அதிர்ச்சித் தகவல்கள்!

என்னால் இந்த பாவத்தை என் வாழ்நாள் முழுவதும் சுமந்து செல்ல முடியாது. நான் உண்மையை சொல்ல வேண் டும் என 2019 ஆம் ஆண்டு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பிலான பல அதிர்ச்சித் தகவல்களை பிரித்தானியாவின் சனல் – 4 இல் வெளியாகியுள்ள காணொளியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆசாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத் தாக்குதலில் சாதாரண பொதுமக்களே ஆலயங்களிலும் ஹோட்டல்களிலும் கொன்று குவிக்கப்பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டமை ஆட்சியை கைப்பற்றுவதற்காகவா என்று கேள்வி எழுப்புகிறார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆசாத் மௌலானா.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசியலில் மிகவும் விசுவாசமாக செயற்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் ஆசாத் மௌலானா அரசியலில் ஈடுபட்டு வந்தவர். என்னிடம் ஆபத்தான கைதிகள் உள்ளனர். அவர்கள் கடும் போக்கானவர்கள். அவர்களில் ஒருவரை சந்திக்குமாறு பிள்ளையான் தன்னிடம் தெரிவித்ததாக ஆசாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்து இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தவ்ஹீத் ஜமாத்தை (NTJ) சேர்ந்த செய்னி மௌலவியை தான் சந்தித்ததாக ஆசாத் மௌலானா கூறுகின்றார். இதையடுத்து இதுவொரு நல்ல சந்தர்ப்பம். நாம் அவர்களை பயன்படுத்துவோம் என பிள்ளையான் எனக்கு கூறினார். கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிள்ளையான் எனக்கு கூறுகிறார் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சாலேக்கும் அந்த அமைப்பினருக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு .


இதையடுத்து தான் தேசிய தவ்ஹீத் ஜமாத்தை (NTJ) சேர்ந்தவர்களுக்கும் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சாலேக்கும் இடையிலான சந்திப்பை கிழக்கில் ஒரு கைவிடப்பட்ட பகுதியில் ஏற்பாடு செய்ததாக ஆசாத் மௌலானா கூறுகிறார்.

இதன் போதே செய்னி மௌலவி தனது சகோதரனான சஹ்ரானை எனக்கு அறிமுகப்படுத்தினார் எனக் கூறுகிறார் ஆசாத் மௌலானா. அதன் பின் நான் உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சாலேயை அவருக்கு அறிமுகப்படுத்தினேன்.

குறித்த சந்திப்பு நிறைவடையும் வரை நான் வெளியில் காத்து நின்றேன். சந்திப்பு நிறைவடைந்து வெளியில் வந்த சுரேஷ் சாலே ராஜபக்ஷர்களுக்கு இலங்கையில் ஒரு குழப்பமான நிலை தேவையாக உள்ளது. அதுவே கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க ஒரு யொரு வழி என்று கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்ற பின்னர் யாரெல்லாம் சந்திப்பில் கலந்து கொண்டார்களோ அவர்களின் முகங்களை நான் அடையாளப்படுத்தி படங்களை வெளியிட்டேன் என்கிறார் ஆசாத் மௌலானா. முதலாவது படம் சஹ்ரான், அவர் தான் அமைப்பின்





தலைவரும் தற்கொலைதாரியுமாவார். இதன் பின்னர் நான் பிள்ளையானுடன் கதைத்தேன். அப்போது அவர் நீ வாயை மூடிக்கொண்டு எதுவும் தெரியாதது போல் இரு அது போதும் என்றார். அவர்களது மக்களையே ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற அவர்கள் கொலைசெய்தார்கள். இதுவொரு கசப்பான உண்மை என்கிறார் ஆசாத் மௌலானா.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ ஆலயங்கள், ஹோட்டல்களில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 269 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போது வெளிநாட்டில் புகலிடம் கோரியிருக்கும் ஆசாத் மௌலானா, ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற தூதரக அதிகாரிகளுடன் தகவலை பகிர்ந்துள்ளார்.

இதேவேளை, ஆசாத் மௌலானா புகலிடம் பெறுவதற்காக இந்தக் குற்றச்சாட்டை முன் வைப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்த நிலையில், சுரேஷ் சாலேயும் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் தொடர்பான அதிர்ச்சிப் பின்னணித் தகவல்களுடன் வெளியிட்ட சர்ச்சைக்குரிய வீடியோவை ஔிபரப்பிய இங்கிலாந்தின் சனல் 4, அந்த வீடியோக்களை இணையத்தில் இருந்து அகற்றியுள்ளது. இணையதளம் மற்றும் சமூக வலைத்தளங்களிலிருந்தும் குறித்த வீடியோவை சனல் 4 நீக்கியுள்ளது.

உ
சுவாமியே சரணம் ஐயப்பா



# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.com
Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## ஆவணிச் சதுர்த்திப் பெருவிழா விஞ்ஞாபனம்
**(ஏகதின லட்சார்ச்சனை மஹா கணபதி ஹோமம், பால்குட அபிஷேகம், மோதக அர்ச்சனை)**
**கை மேல் பலன் தரும் அற்புத விரதம்**
**18.09.2023 திங்கட்கிழமை**

எம் பெருமான் மெய்யடியார்களே!
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி பெருவிழாவை முன்னிட்டு விநாயகப் பெருமானுக்கு 18.09.2023 திங்கட்கிழமை காலை 5.00 மணிமுதல் மஹா கணபதி ஹோமம், சங்காபிஷேகம், அடியார்கள் பங்குபற்றும் பால்குட அபிஷேகம், மோதக அர்ச்சனை, ஏகதின லட்சார்ச்சனை என்பன நடைபெற்று இரவு 7.30 மணிபூசையுடன் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் தவில் நாதஸ்வர கச்சேரியுடன் பக்திப் பரவசமாக வீதிவலம் அருட்காட்சி நடைபெறும். அடியார்கள் தவறாது கலந்து உபயங்களைச் சிறப்பித்து ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மஹா கணபதி ஹோமம் | காலை 5.00 மணி |
| 108 சங்காபிஷேகம் | காலை 6.00 மணி |
| பாற்குட அபிஷேகம் | காலை 6.00 மணி |
| விசேட பூஜை | காலை 7.00 மணி |
| 1ஆம் கால லட்சார்ச்சனை | காலை 8.30 மணி |
| 2ஆம் கால லட்சார்ச்சனை | காலை 9.15 மணி |
| பாற்குட, 10கும்ப அபிஷேகம் | காலை 10.00 மணி |
| விசேட பூஜை | பகல் 11.00 மணி |
| 3ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 11.30 மணி |
| 4ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 12.30 மணி |
| 5ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 2.00 மணி |
| 6ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 2.45 மணி |
| 7ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 3.30 மணி |
| 8ஆம் கால லட்சார்ச்சனை | மாலை 4.15மணி |
| 9ஆம் கால லட்சார்ச்சனை | மாலை 5.00 மணி |
| 10ஆம் கால லட்சார்ச்சனை | மாலை 5.45 மணி |

10 கும்ப அபிஷேகம்,
பாற்குட அபிஷேகம் மாலை 6.30 மணி.
மாலை 7.30 மணிக்கு விஷேட பூஜை நடைபெற்று
வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து
பிள்ளையார் வீதிவலம் வருவார்.

### பொது மக்கள் கலந்து கொள்ளும் உபயம்

லட்சார்ச்சனை, கணபதி ஹோமம், பாற்குட அபிஷேகம்,
மோதக அர்ச்சனை ஆகியவற்றில்
பங்கு பெற விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஐயப்பன் ஆலய ஐந்து ஏக்கர் நிலம் வாங்கியதும், பல திருப்பணிகள் கைகூடியதும்,
பல அடியார்களின் வேண்டுதல்கள் நிறைவேறியதும் ஐயப்பன் ஆலயத்தில்
ஆவணி சதுர்த்தி தினத்தில் ஏகதின லட்சார்ச்சனை ஆரம்பித்ததன் காரணமாகவே.
எனவே பல சிறப்புக்கள் வாய்ந்த இப்புண்ணிய தினத்தில் முடிந்த உபயங்களை
மேற்கொண்டு புண்ணிய பலன்களைப் பெற்றுய்யும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

**பூக்கள், அறுகு, பூசைப்பொருட்களை ஆலயத்தில் ஒப்படைக்கலாம்.**

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 செப்டம்பர் 2023 முதல் 08 செப்டம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவசுந்தரம் உமாதேவி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த (நாகபூஷணி அரிசி ஆலை) திருமதி சிவசுந்தரம் உமாதேவி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 13 செப்ட.ம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சிவசுந்தரம் உமாதேவி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவனடியான்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 03செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி ஆகிய இரண்டு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 07 செப்டம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29,3வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்

### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 13 செப்டம்பர் 2023 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



26 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் மதுரா சதானந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



31 ஆகஸ்ட் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசுக்கும் திரு திருமதி கீர்த்தன் மயூரிகா தம்பதிகளும் அன்பு மகன் ஈசானும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



03 செப் 2023 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 செப் 2023 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




04 செப் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 12வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் உடன்பிறப்புக்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



05 செப் 2023 செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஈஸ்வரபாதம் இராஜதுரை அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




06 செப் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு இராஜேந்திரகுமார் இராஜேந்திரம் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



07 செப் 2023 வியாழக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது முதலாவது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 செப் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் மிரேன் விஜயரஞ்சன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

Amma Pawn Broker
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102 Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
Catering, Bakery & Take Out
Call 416 NANTHA 1 - 416 626 8421

N.K.S DRAPERY & BLINDS FABRIC
Contact: Ketha 416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
S. Christeen
416-258-6759

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON 416.757.9111
994 Albion Rd Etobicoke, ON 647.352.2229

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

Century 21
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!

GODAVARI
Truly South Indian
416-431-5577
416-901-5578
795 Markham Rd, Scarborough, ON M1H 2Y2
godavarica.com
godavaritoronto@gmail.com



வெள்ளி விழா கண்ட
அரவிந்தனின்
மெகா ரியூனேர்ஸ்
இசையில்

Mega Tuners

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை
12வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்



பிரபல பின்னணிப் பாடகர்
## முகேஷ்



பிரபல பின்னணிப் பாடகி
## சுர்முகி

OCTOBER 29 2023
SUN @ 6:00PM

ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE
TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

கனேடிய தமிழ்ப்பாடகர்கள்
இணைந்து வழங்கும்

# இன்னிசை மாலை

அன்பளிப்பு
**$200.00 · $100.00 · $50.00**
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

சிறப்பு உணவு: றொறன்ரோவின் முன்னணி உணவகமான நந்தா கேற்றறிங் வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:
ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3, SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

HAYHER & VASAN LITIGATION LAWYERS
CAOUTHAM VASAN
208-885 PROGRESS AVE SCARBOROUGH, ON
207-32 VILLAGE CENTRE PLACE MISSISSAUGA, ON
Personal Injury · Real Estate · Wills and Estates · Immigration
vasan@hvlaw.ca
905-461-1515

வசந்தம் சுப்பர்மார்க்கெட்
2900 Markham Road, Scarborough, ON M1X 0C8
416 292 8585

TIMES IRON WORKS INC.
Times Metals

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough 309-80 Corporate Dr Scarborough, ON M1H3G5
Mississauga Branch 45-2355 Derry Road Mississauga, ON L5S1V6
Tel: 416.439.0224
Fax: 416.439.0226

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298-1700
Fax: (416) 754-8651
Cell: (416) 993-2638
Toll Free: 1-866 765 9427
Toll Free Fax: 1-866 765 9375
raj@smi4loan.com
www.standardmortgagesinc.com
RAJ SUBRAYAM
Director

NON-MEDICAL INSURANCE
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
Life Insurance · Critical Illness · Disability · RESP · RRSP · Mortgage Protection Insurance · Travel Insurance

மேன்மைகொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# அருள் மிகு திரு முருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்





| ஆரம்பம் | | பூர்த்தி |
|---|---|---|
| 05 - 09 - 2023 |  | 14 - 09 - 2023 |

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 20ம் நாள் (05-09-2023) அச்சுவினி நட்சத்திரமும். ஸப்தமி திதியும் கூடியுள்ள நன் நாள் செவ்வாய் கிழமை மாலை தொடங்கி ஆவணிமாதம் 29ம் நாள் (14-09-2023) வியாழக்கிழமை அமாவாசை திதியில் பூர்த்தியுறும் வகையில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும். கந்தன் பக்தர்களாகிய அனைவரும் கலந்துகொண்டு கந்தனின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

| 1ம் திருவிழா தொடக்கம் 8ம்திருவிழா வரை | சப்பறத்திருவிழா<br>12-09-2023 | தேர்த்திருவிழா<br>13-09-2023 | 1008 சங்காபிஷேகம்<br>14-09-2023 |
|---|---|---|---|
| மாலை 5.30 ஸ்நபன கும்பாபிஷேகம்<br>மாலை 7.00 மூலமூர்த்திகட்கு பூஜாரம்பம்<br>மாலை 7.30 கலை நிகழ்ச்சி<br>மாலை 8.00 வசந்தமண்டபப் பூஜை<br>தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா | மாலை5.00 ஸ்நபநாபிஷேகம்<br>மாலை7.00 பூஜாரம்பம்<br>மாலை7.30 கலைநிகழ்வுகள்<br>மாலை8.00 வசந்தமண்டபப்பூஜாரம்பம்<br>தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா | காலை 7.30 ஸ்நபனாபிஷேகம்<br>காலை 09.00 பூஜாரம்பம்<br>காலை 10.00 வசந்தமண்டபபூசை<br>தொடர்ந்து தேர்வீதியுலா,<br>பச்சையணிந்த திருக்கோலம்<br>1.00 மணிபிராயச்சித்தசாந்தி | 7.00 காலை பூஜை<br>8.00 காலை சங்காபிஷேகம்<br>11.00 காலை பூஜாரம்பம்<br>மாலை வசந்தமண்டபப்பூசை |

## தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன

## உற்சவநாட்களும் உபயகாரர்களின் விபரமும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 04-09-2023 | திங்கள்காலை | கணபதிஹோமம் | அலங்காரம்,வாகனம் | பா-விக்கினராஜா |
| 05-09-2023 | செவ்வாய் | 1ம் திருவிழா | ஓம் பிரணவஉபதேசம் | சி-அ-ஜயாத்துரை குடும்பம் திருநெல்வேலி |
| 06-09-2023 | புதன் | 2ம் திருவிழா | திருநடனம் | சிவகுமார்,வனஜா கந்தசாமி குடும்பம் |
| 07-09-2023 | வியாழன் | 3ம் திருவிழா | கார்த்திகை | உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 08-09-2023 | வெள்ளி | 4ம் திருவிழா | தண்டபாணி | சொர்ணலிங்கம் மகாலிங்கம் குடும்பம் |
| 09-09-2023 | சனி | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 10-09-2023 | ஞாயிறு | 6ம் திருவிழா | மஞ்சம் | சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 11-09-2023 | திங்கள் | 7ம் திருவிழா | வேட்டை | பாஸ்கரன் கணேசானந்தன் |
| 12-09-2023 | செவ்வாய் | 8ம் திருவிழா | சப்பறம் | பிரதீபன் பாபநாசசிவம் கிருட்டிணர் குடும்பம் |
| 13-09-2023 | புதன் காலை | 9ம் திருவிழா | தேர் | விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| 13-09-2023 | புதன் மாலை | இரவுத்திருவிழா | தேரடி | |
| 14-09-2023 | வியாழ காலை | 10ம்திருவிழா | 1008 சங்காபிஷேகம் | அசோக்குமார் வேலாயுதம் |
| 14-09-2023 | வியாழ மாலை | இரவுத்திருவிழா | சுவாமி வீதியுலா | |
| 15-09-2023 | வெள்ளி | காலை | பிராயச்சித்தம் | வல்லிபுரம் கணேசன் |
| 15-09-2023 | வெள்ளி | இரவு | திருக்கல்யாணம் | செந்தில்குமரன் ஆனந்தன் |
| 16-09-2023 | சனி | இரவு | வைரவர்மடை | சிவா சின்னத்தம்பி குடும்பம் |

**கற்பூரச்சட்டி,பால்குடம், காவடி எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவுசெய்யவும்**

www.jeyadhurgatemple.com 1808 Drew Road, Mississauga, ON.L5S 1J6. 905-612-1856

# குருந்தூர்மலை தொடக்கம் கஜேந்திரகுமார் வீடு வரை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



இலங்கைதீவின் சமகால பௌத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஜனநாயக உள்ளடக்கம் இல்லை.அது தனது அரசியல் அபிலாசைகளை ஜன நாயகத்தின் மொழியில் வெளிப்படுத்து வதும் இல்லை. அதுவும் பிரச்சினை யின் ஒரு பகுதி தான் —பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட் டது போலவே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானோடு பிக்குகள் மோதத் தொடங்கி விட்டார் கள்.

திருகோணாமலை கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குள் அத்துமீறிப் புகுந்த பிக்குகள் அடங்கிய குழுவை யாராலும் தடுக்க முடியவில்லை. அங்கே போலீஸ் இருந்தது. அரச உயர் அதிகாரிகள் இருந்தார்கள். அங்கிருந்த சிங்கள உயர் அதிகாரிகள் பிக்குகளைக் கண்டதும் எழுந்து நிற்கிறார்கள். சிறு தொகுதி தமிழ் அதிகாரிகள் எழுந்து நிற்க வில்லை. ஆளுநரும் எழுந்து நிற்கிறார். அவருடைய உதவியாளர் யாருக்கும் கைபேசியில் அழைப்பை எடுக்கிறார். ஆனால் யாராலும் அந்த இடத்திலிரு ந்து பிக்குக்களை அகற்ற முடிய வில்லை.

ஊடகவியலாளர்கள் சம்பவத்தை நேரலையாக ஒளிபரப்புகிறார்கள். அந்த இடத்தில் பிக்குவுக்கு பதிலாக வேறு யாராவது இருந்திருந்தால் சட்டப்படி கைது செய்திருப்பார்கள். ஆனால் இலங்கைத்தீவின் தேரவாத பிக்குகள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்.

நடவடிக்கைகளை மக்கள் எதிர்க்கிறார் கள்.

திருக்கோணமலை, குச்சவெளி ஆகிய இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளின தும் எல்லையில் உள்ள ஆறாங்கட்டை அல்லது பெரியகுளம் என்ற இடத்தில் திருகோணமலை-நிலாவெளி வீதியில்



ஒரு விகாரையைக் கட்ட முயற்சிக்கப் படுகிறது. கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் அதற்கருகே காணப்படுகிறது. பிரதேச சபை அதற்கு அனுமதி வழங்க வில்லை. எனினும் வழிபாட்டிடங்களைக் கட்டுவதற்கு பிரதேச சபையின் அனுமதி தேவையில்லை என்று பிக்குகள் கடந்த வெள்ளிக்கு கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஒழுங்குபடுத்திக் கூறி யுள்ளார்கள்.

அடுத்தது, புல்மோட்டைப் பகுதியில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் அரிசி

மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஆளுநர் பதவிக்கு ஒரு தமிழரை நியமித்ததன் மூலம் அவர் தீர்வைத் தரப்போகிறார் என்ற ஒரு தோற்றம் முதலில் கட்டியெழுப்பப்பட்டது. செந் தில் தொண்டைமானின் நியமனத்தின் பின்னணியில் இந்தியாவைத் திருப்திப் படுத்தும் நிகழ்ச்சிநிரல் உண்டு. ஆனால் பிக்குகள் ஆளுநரோடு மோதத் தொட ங்கி விட்டார்கள்.

அண்மை மாதங்களாக சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு நடவடி க்கைகளில் பௌத்த மதகுருக்கள் முன்னிலையில் நிற்கிறார்கள். குருந்தூர் மலை தொடக்கம் கஜேந்திரகுமாரின் வீடு வரை பிக்குக்களே காணப்படு கிறார்கள். அது தற்செயலான ஒன்றாகத் தெரியவில்லை. திணைக்களங்களும்

ளாதாரத்தை நிமிர்த்த முடியுமோ தெரிய வில்லை. சஜித்தின் தலைமை பலவீன மாக இருப்பது ரணிலுக்கு ஒரு வரப் பிரசாதம்.எனினும் சஜித் ஏனைய கட்சி களோடு ஒரு பெருங்கூட்டை உரு வாக்கினால் அது ஒப்பீட்டளவில் சவா லாக மாறும். இம்முறை தமிழ் வாக்குகள் தனக்குக் கொத்தாக விழப் போவதில்லை என்று ரணிலுக்கு தெரி கிறது. ராஜபக்சகளின் அனுசரணை யோடு அவர் தேர்தலில் போட்டியிட்டால் தமிழ் வாக்குகளை முழுமையாகப் பெறமுடியாது. எனவே தமிழ் வாக்கு களுக்காக தமிழ் உணர்வுகளோடு சமரசம் செய்வதை விடவும் சிங்கள பௌத்த வாக்குகளை கவர்வதே அவ ருக்கு உடனடிக்கு இலகுவான வழி.

மேலும் அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது ஐநா மனித உரிமை கள் ஆணையாளருடைய அறிக்கை யோடு ஒரு புதிய தீர்மானம் நிறை வேற்றப்படலாம். தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சியாக அமையுமா அல்லது புதியதாக அமையுமா என்று பார்க்க வேண்டும்.

முன்னைய தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவ லகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகவும் அத்த தீர்மானத்தில் முடிவெடுக்கப்படக்கூடும். எனவே அக் காலகட்டம் இலங்கையில் சிங்கள பௌத்த உணர்வுகளை அதிகம் தூண் டக் கூடிய ஒரு காலகட்டமாக அமை யும். அதைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தல் வரும். அதில் ராஜபக்சகளின் அனுசரணையோடு ரணில் களமிறங்கு வாராக இருந்தால் அவர் ஐநா தீர்மான த்தின் விளைவாகத் தூண்டி விடப் பட்ட சிங்கள பௌத்த உணர்வுகளுக்கு தலைமை தாங்கி எப்படி அடுத்த ஜனாதிபதியாக வரலாம் என்று தான் சிந்திப்பார்.

அதனால் இப்பொழுது நடக்கும் சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் நிலப்பறிப்பு நடவடிக்கைகள் மேலும் முடுக்கி விடப்படக்கூடிய அரசியற் சூழலே வளர்ச்சியடைந்து வருகிறது. இதில்

பிக்குகள் மட்டுமல்ல, சிங்கள பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டத் துக்கு அப்பாற்பட்டவர்கள் தான். நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படு த்தி சரத் வீரசேகர இரண்டாவது தடவையாக முல்லைத்தீவு நீதிபதியை இழிவான வார்த்தைகளில் அவமதித்திரு க்கிறார். நாடாளுமன்ற சிறப்புரிமை எனப்படுவது நீதிபதியை நீதிமன்றத்தை அவமதிப்பதற்கான ஒரு கவசமா? சரத் வீரசேகர அதை ஒரு கவசமாகத் தான் பயப்படுத்துகிறார். பிக்குகளும் சரத் வீரசேகரங்களும் சட்டத்தைக் கையில் எடுக்கிறார்கள். நீதிமன்றங்களை அவமதி க்கின்றார்கள்.

தையிட்டியில் விகாரை கட்டப்பட்டிருப் பது தனியார் காணியில். அது சட்ட விரோதம். தொல்லியல் திணைக்களம் குருந்தூர் மலையில் நீதிமன்றத்தின் ஆணையை மதித்து நடக்கவில்லை. மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை யிலும் கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையை அமுல்படுத்த முடியவில்லை. செந்தில் தொண்டமான் கிழக்கின் ஆளுனராக நியமிக்கப்பட்டதும் அவ்வாறு சட்ட விரோதமாக முன்னெடுக்கப்படுகின்ற காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்த முற்பட்டார்.

திருக்கோணமலையில் சற்று உயரமாக, குன்றுகளாகக் காணப்படும் எல்லா இடங்களிலும் விகாரைகளைக் கட்டு வது என்று ஒரு பகுதி தேரர்கள் முடிவெடுத்து விட்டார்கள் போலத் தெரிகிறது.

ஏற்கனவே கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் ஒரு விகாரை கட்டப்பட்டு விட்டது. வெருகலில், கல்லடியில், மலைநீதியம்மன் மலையில் 2006இல் ஒரு விகாரை கட்டப்பட்டு விட்டது. அந்த மலையில் முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தகவற் தொடர்புக் கட்டுமானம் ஒன்று இருந்தது.

அதில் இப்பொழுது விகாரை உள்ளது. அங்கு மேலும் நிலத்தைப் பிடிக்கும்

மலைப் பகுதி.அங்குள்ள கடற்கரையில் காணப்படும் குறுணிக் கற்கள் அரிசி போல அழகாய் இருப்பதால் அப் பகுதிக்கு அப்படி ஒரு பெயர். அங்கே யும் ஒரு விகாரையைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

அடுத்தது குச்சவெளியில் குச்சவெளி போலீஸ் நிலையத்திற்கு எதிராக ஒரு சிறிய குன்று. அங்கே ஒரு விகாரை ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட் டது.அடுத்தது, தென்னை மரவாடியில் உள்ள சிறிய மலை.அ து யாழ்ப் பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரைக்கு வரும் யாத்திரிகர்கள் இளைப்பாறும் ஒரு மலையடிவாரம். அதனால் அது கந்தசாமி மலை என்று அழைக்கப்படுகிறது. அங்கேயும் ஒரு விகாரையைக் கட்ட ஏற்பாடுகள் நடப்ப தாகத் தகவல்.

தென்னை மரவாடிச் சந்தியில், முல்லைத் தீவுக்கு திரும்புமிடத்திலும் மூதூரில் மூன்றாங் கட்டைப் பகுதியிலும் விகாரைகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு கள் நடப்பதாக அப்பகுதி மக்கள் கூறு கிறார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் செறிவாக வாழும் பிரதேசங் களில் குறிப்பாகப் பெரியகுளம் பகுதியில் விகாரை அமைக்கப்படுவதை செந்தில் தொண்டமான் தடுக்க முற்பட்டார். அதனால் திருகோணமலை கச்சேரியில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் குழப்புவதற்கு, கச்சேரிக்கு முன்பாக பிக்குகள் ஆர்ப்பா ட்டம் செய்தார்கள். முடிவில் ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்திற்குள் புகுந்து கூட்டத்தை குழப்பியிருக்கிறார் கள்.

செந்தில் தொண்டமான் மத்திய அரசின் அதிகாரங்களை பிரதிநிதித்துவப்படுத் தும் ஒரு மாகாண ஆளுநர். ஒற்றை யாட்சிக் கட்டமைப்புக்குள், மாகாண சபையில் மக்களால் தெரிவு செய்யப் பட்ட முதலமைச்சரை விடவும் ஆளு நருக்கே அதிகாரம் அதிகம். தமிழ்

அரசபடைகளும் பொலிசும் வெளிப் படையாகச் செய்ய முடியாத விடயங் களுக்கு பிக்குக்கள் முன்னிறுத்தப்படுகி றார்களா? சிங்கள மக்கள் மத்தியில் பிக்குகளுக்கு மதிப்பு உண்டு. அவர்கள் சன்னியாசிகளாகப் பார்க்கப்படுகின்றார் கள். அதனால் தான் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் பல் சமயக் குழுவினரை முற்றுகையிட்டு வைத்திருந்த பிக்குவை அங்கு வந்த



போலீஸ் அதிகாரி முதலில் காலில் விழுந்து வணங்கினார். அப்படித் தான் திருக்கோணமலைக் கச்சேரிக்குள் மாவ ட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத் தைக் குழப்பிய பிக்குக்கள் மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைந்ததும் பெரும் பாலானவர்கள் எழுந்து நிற் கிறார்கள். அவர்கள் சன்னியாசிகள் என்ப தனால் அந்த மதிப்பு. அந்த மதிப்பை ஒரு கவசமாகப் பயன்படுத்தி ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளில் அவர்கள் முன் நிறுத்தப்படுகிறார்கள்.

அதாவது ரணில் விக்கிரமசிங்க ஏற்க னவே சில ஆண்டுகளுக்கு முன் வாக்களித்தபடி ஆயிரம் விகாரைகளைக் கட்டி முடித்து விட வேண்டும் என்று முடிவெடுத்து விட்டாரா? அ டுத்த ஆண்டு முடிவதற்கிடையில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த வேண் டும். அதற்கிடையே நாட்டின் பொரு

சரத் வீரசேகர, உதய கமன்பில், விமல் வீரவன்ச, மேர்வின் டி சில்வா.. போன்ற வர்கள் எழுப்பும் இனவாத அலையின் விளைவுகளையும் ரணில் தனக்குச் சாதகமாக அறுவடை செய்து கொள் வார். எனவே கூட்டிக்கழித்துப் பார்த் தால் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்த வாக்கு களைக் கவரத் தேவையான தனது தகைமையை எப்படி அதிகப்படுத்து வது என்று தான் ரணில் சிந்திப்பார். அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களபௌத்த மயமாக்கலையும் நிலப் பறிப்பையும் அவர் நிறுத்தக்கூடிய வாய்ப்புகள் மிகக்குறைவு.

அண்மையில் தமிழ் கட்சித் தலைவர் கள் சிலரைச் சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் குருந்தூர் மலை
(22ம் பக்கம் பார்க்க)

# எது வரலாறு?

வரலாறு என்பது என்ன? அது எப்படியானது? வெடிகுண்டையும் விட ஆபத்தானதா? அவ்வளவு பயங்கரமானதா? அப்படியென்றால் வரலாறு ஏன்? எதற்காக? யாருக்காக? என்ற கேள்விகள் இன்று இலங்கைக் குடிமக்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் அச்சத்தோடு எழுந்து கொண்டிருக்கின்றன. (இந்த வரலாற்றுக் கதையாடல்களை இனிமையாக ருசித்துக் கொண்டிருப்போர் விலக்கு).

அந்தளவுக்கு வரலாற்றுக் கதைகள் (வரலாற்றுப் புரட்டுகள்) அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களாலும் ஊடக அதிகாரத்தில் இருப்போரினாலும் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இனவன்முறைகளைத் தூண்டும் இந்த வரலாற்றுக் கதைகள், உண்மையில் வெடிகுண்டையும் விட அபாயகரமானவை. வெடிகுண்டுகள் வெடிக்கும் கணத்தில் மட்டும் தான் பாதிப்பை உண்டாக்கும். இவை அப்படியல்ல. மனதில் ஆழமாக ஊடுருவி தலைமுறைகளுக்கு வியாதியாகத் தொடரக் கூடியவை. தலைக்குள் ஊடுருவி விட்டால் இதயத்தையே கல்லாக்கி, இரும்பாக்கி பரம்பரைகளை நாசமாக்கி விடுபவை. அதனால் தான் இவை மிகப் பயங்கரமான வெடிகுண்டுகள் நச்சு விதைகள் என்கிறோம்.

இந்த வரலாற்றுக் கதைகளினால் எழுகின்ற மேற்குறித்த கேள்விகளை எழுப்புவோர் நியாயமான வரலாற்றாசிரியர்களோ வரலாற்று அறிஞர்களோ இல்லை. (அதென்ன, நியாயமான வரலாற்று ஆசிரியர்களும் நியாயமான வரலாற்று அறிஞர்களும் என்று நீங்கள் கேட்கலாம். வரலாற்றை அறிவார்ந்த கண் கொண்டு, சமூகப் பொறுப்பு என்ற மனம் கொண்டு பார்க்கின்றவர்களே நியாயமான வரலாற்று ஆசிரியர்களும் அறிஞர்களுமாவர்) வரலாற்றாசிரியர்களும் அறிஞர்களும் கேள்வி எழுப்பினால், அதில் அறிவின் சாரமிருக்கும். ஓரளவுக்கேனும் அதில் நியாயமிருக்கும்.

வரலாறு பற்றி இப்பொழுது அதிகமாகப் பேசுவதும் மக்களை அந்தப் பக்கமாக இழுத்துத் திருப்பி விடுவதும் இனவாதிகளே! தங்களுடைய அரசியல் பெரிய லாபத்துக்காக குறுகிய வழியில் இனவாதத்தைத் தூண்டுகிறார்கள். அதற்காக வரலாற்றை ஒரு கருவியாக எடுத்தாள்கிறார்கள். தமக்கேற்ற விதமாக வரலாற்றுப் புனைவை உருவாக்குகிறார்கள். இவர்களுடைய வரலாற்றுக் (கட்டுக்) கதைகள் இவர்கள் சொல்லும் வரலாறு பற்றிய புனைகதைகள் அத்தனையும் அறிவுக்கும் உண்மைக்கும் அப்பாலானது. நகைப்புக்குரியது. முட்டாள்தனமானது. அதனால்தான் இது ஆபத்தானதாக உள்ளது. சாத்தான் வேதம் ஓதுகிறது என்பார்களே! அதுதான் இது. தேவ கட்டளையை மீறியொலிக்கும் சாத்தான்களின் குரல்.

நாடோ பொருளாதாரத்திலும் இன நெருக்கடியிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் பிச்சையெடுப்பதைப ்போலக் கெஞ்சிக் கெஞ்சி கடன்பட்டும் உதவி கேட்டுக் கொண்டுமிருக்கிறது அரசாங்கம். நாட்டைக் கொள்ளை அடித்தால் இப்படித் தான் உலகத்திடம் பிச்சையெடுக்க வேண்டி வரும் என்று யாரும் எளிதாகச் சொல்லிக் கடந்து விடலாம். ஊழலும் மோசடியும் பொறுப்பின்மையும் ஆட்சி அதிகாரத்தில் இருப்போரிடம் மட்டும் தான் இருக்கிறது என்றில்லை. நாட்டில் பொறுப்பான இடங்களில் பதவி வகிக்கின்ற அத்தனை பேரிடத்திலும் செழித்துள்ளது.

ஆளுந்தரப்புக்கு நிகராக அதற்கு வெளியே உள்ள எதிர்க்கட்சிகளிடத்திலும் ஊழலும் பொறுப்பின்மையும் வளர்ந்து நிற்கிறது. அரச நிர்வாக, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் இவை தாராளம். ஊர்கள், கிராமங்களில் உள்ள மக்கள் அமைப்புகளிடம் இது பரவியுள்ளது. அங்குள்ள மக்களில் சிலரிடமும் இவை ஊடுவி வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இதனால் தான் முழுதாகவே கவிழ்ந்த நிலையில் நாடு இருக்க வேண்டிய நிலை வந்தது. நாட்டைக் காப்பாற்றுவதற்கு எந்தப் புதல்வரும் புதல்வியரும் இல்லை என்றாகி விட்டது.

இந்தச் சூழ்நிலையில் தான் பஞ்சம் தலை விரித்தாடப் போகிறது என்ற அச்சத்தில், முன்னெச்சரிக்கையுடன் ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டுப் பிழைப்புத் தேடி, பொருளாதாரப் பாதுகாப்புத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள், உயர் பொறுப்புகளிலும் பதவிகளிலும் இருப்போர் தொடக்கம் எல்லோரும் ஓடுகிறார்கள்.




இந்த ஓட்டம் சாதாரணமானதல்ல. மிக மிக ஆபத்தானது. இது நீடித்தால் சில மாதங்களில் ஆஸ்பத்திரிகளில் மருத்துவர்களே இருக்க மாட்டார்கள். நாட்டிலே மருந்துக்கும் மருத்துவர்களைக் காண முடியாது என்ற நிலை ஏற்பட்டு விடும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும். இப்பொழுதே பல பாடசாலைகளில் பொருத்தமான போதிய ஆசிரிய வளமின்றி மட்டுப்பாடுகளுடன் கல்வியை ஓட்டிக்கொண்டிருக்கிறோம்.

இதுபோலத் தான் ஒவ்வொரு துறையிலும் பெரிய வெற்றிடங்கள் உருவாகப் போகின்றன. உத்தியோகத்தர்கள் மட்டும் தான் நாட்டை விட்டுப் போகிறார்கள் என்றில்லை. படித்துக் கொண்டிருப்போர், தொழில்துறை அனுபவமுடையவர்கள் என்று எல்லோரும்தான் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலை நீடித்தால் எதிர்காலத்தில் பல திணைக்களங்களிலும் ஆட்பற்றாக்குறை ஏற்படும். நிர்வாகம் முடங்கி நாடே படுத்து விடும். இந்த வெளியேற்றம் சாதாரணமானதல்ல.

ஒரு நாட்டின் வளம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. சாதாரண வளமல்ல. மனித ஆற்றலின் வளம். மனித ஆற்றலின் வளமே மிகச் சிறந்தது.

பிறந்து, வளர்ந்து, படித்து, அறிவாளிகளாகவும் தொழில் வல்லுனர்களாகவும் உருவாகுவதற்கு அல்லது உருவாக்கப்படுவதற்கு சராசரியாக முப்பது ஆண்டுகள் செல்லும். பலருக்கு அதற்கு மேலும் செல்லும். இதற்கான செலவைச் செய்தது நமது நாடேயாகும்.

இப்படி நாட்டின் செலவில் வளர்ந்து, ஆளுமைகளாக உருவாகியோர் தான் நாட்டின் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமாக உழைத்துக் கொடுக்க வேண்டியவர்கள். நாட்டைக் கட்டியெழுப்பவும் அதைப் பாதுகாக்கவும் வேண்டியவர்கள். நாட்டுக்கு நெருக்கடி வரும்போது அதில் நின்று தாக்குப் பிடித்து அதை மீட்க வேண்டியவர்கள். ஆனால், இவர்கள் நெருக்கடி வந்து விட்டதென்று ஓடுகிறார்கள் என்றால்…?

அதிகம் ஏன்? நீங்கள் பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, படிப்பித்து ஆளாக்கிய பிறகு அவர்கள் உங்களைக் கைவிட்டு விட்டு ஓடிப்போனால்…? பிறத்தியாருக்கு உழைத்துக் கொடுப்பவர்களாக மாறினால்…? அப்பொழுது உங்கள் நிலை என்னவாகும்? உங்கள் மனதும் உங்கள் வாழ்வும் எப்படியிருக்கும்?

அப்படித் தான் இன்று நாட்டை விட்டு வெளியேறுவோரின் நிலையும் நாட்டின் நிலையும் உள்ளது.

இதேவேளை இப்படிச் செல்வோரைப் பிற நாடுகள் வரவேற்கின்றன. இவர்களை அழைக்கும் செலவு கூட இல்லாமல், தங்களுக்குத் தேவையான ஆற்றலர்களையும் தொழிலாளர்களையும் இந்த நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. தனியே அதற்கான கூலியை மட்டும் கொடுத்தால் போதும் என்ற நிலையில் வைத்திருக்கின்றன. அதுவும் தொடக்கத்தில் மிகக் குறைவான ஊதியமும் வாழ்க்கை வசதிகளுமே வழங்கப்படுகின்றன. அந்தளவுக்கு நம்முடைய மக்களை வைத்து அவை தம்மை வளர்த்துக் கொள்கின்றன. ஆனால் நமது நாடோ!?

இதெல்லாம் இந்த வரலாற்றுப் பிரியர்களான இனவாதிகளுக்கு புரியவே புரியாது. அவர்களுடைய தலைக்குள் இருப்பது மண் கூட இல்லை. அதையும் விடக் கழிவான பொருளே உண்டு. அதனால் தான் அவர்களை நாம் தயங்காமல் முட்டாள்கள், மூடர்கள் என்கிறோம்.

நாடு எதிர்கொண்டிருக்கும் இந்தத் திக்குமுக்காடல் போதாதென்று இந்த இனவாதிகள் வரலாற்றுப் புனைவுகளைக் கட்டவிழ்த்து மேலும் தொண்டைக்குழியை இறுக்குவதென்றால்….?

இதிலே துயரமும் வெட்கக் கேடும் என்னவென்றால், அப்படியானவர்களை நமது மக்கள்தான் பாராளுமன்றத்துக்கே தங்கள் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்துள்ளார்கள்.

சரத் வீரசேகரா அண்மைக் காலத்தில் முளைத்த ஒரு அரசியல்வாதி. சிங்களத் தரப்பில் அவருக்குப் பெரிய ஆதரவுத் தளமொன்றுமில்லை. ஆனால், தன்னுடைய இனவெறிப் பேச்சுகளால் தமிழ் அரசியல், ஊடகப் பரப்பைத் தன்வசப் படுத்தியிருக்கும் கெட்டிக்காரர்.

இன்னொரு முட்டாள் உதய கம்மன்பில. கொழும்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை முற்றுகையிடுகிறார். இதுவா இப்பொழுது தேவையானது?

ஏற்கனவே இணக்கத்தீர்வுக்கு எதிர்ப்புள்ளியில் இயங்குபவர் கஜேந்திரகுமார். அப்படியானவரை முற்றுகையிடுவதென்பது, தமிழ்ப்பரப்பில் அவருக்கான ஆதரவு அலையை மேலும் பெருக்குவதாகவே அமையும். அதாவது மேலும் தீவிர நிலையை ஊக்கப்படுத்துவதாக இருக்கும். அப்படி அமையும் போது இலங்கையில் மேலும் நெருக்கடியும் இனவாதமுமே வளரும். பிரச்சினைகள் தீராது. சிங்கள அதிகாரத் தரப்பின் உள் நோக்கமும் அதுதான். கஜேந்திரகுமாரை வளர்த்து விடுவது. அவர் வளர்ந்தால்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமலே காலத்தை இலகுவாக ஓட்ட முடியும். எனவே பிரச்சினைகளை வளர்த்து அதில் அரசியல் ஆதாயம் தேடுவதே இவர்களின் நோக்கம்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



இப்படித்தான் விமல் வீரவன்சவும். எந்த நிலையில் எதைப் பேச வேண்டும்? எதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்? என்று சிந்திக்காதவர்கள். நாடிருக்கும் நிலையைப் பற்றிச் சிந்திக்காதவர்கள்.

வெளிச்சக்திகளுக்கு நாடு அடமானமாகிக் கொண்டிருப்பதைப் பற்றிய சிந்தனையே இல்லாதவர்கள். இப்படியானவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் அவர்களால் தீமையே அதிகம்.

சரத் வீரசேகரா, உதயன்கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றவர்கள் அரை மூடர்கள் என்றால் இவர்களையும் இவர்கள் சொல்வதையும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டு இவர்களுக்குப் பதிலளிக்க முற்படுவோர் முழு மூடத்தனத்தில் இயங்குவோராகும். சிறிதரன், கஜேந்திரன், விக்னேஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் போன்றவர்கள் இந்த வகையானோரே!

செல்வாக்கற்ற ஒற்றை மனிதர்களான சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றோர் உளறுவதையெல்லாம் பெரிசாக்கிப் பொது மக்களுக்கு செய்தி அளிக்கும் ஊடகங்களும் முழு முட்டாள்தனத்தில் இயங்குகின்றவையாகும்.

அப்படியென்றால், இவர்கள் சொல்லும் வரலாற்றுப் புரட்டுகளை எல்லாம் நாம் கேட்டுக் கொண்டு சும்மா இருப்பதா? பதிலடி கொடுக்க வேண்டாமா? என்று சிலர் கேட்கக் கூடும்.

சரத் வீரசேக, விமல்வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் சில இனவாதப் பிக்குமார், இனவாத ஊடகங்கள் வெளிப்படுத்தும் கருத்துகள் நம்மைச் சீண்டும்தான். அதுதான் இந்தத் தரப்பின் நோக்கமுமாகும். நம்மையும் இனவாதச் சகதிக்குள் தள்ளி விடுவது.

ஆனால், இவர்கள் விரிக்கின்ற இந்த வலைக்குள் நாம் விழக் கூடாது. அதுதான் நமது அரசியலாக இருக்க வேண்டும். அறிவினால் இந்தச் சதி வலையில் சிக்காமல் இதைக் கடந்து செல்ல வேண்டும். மாற்று உத்திகளைக் கையாண்டு இவர்களை முறியடிக்க வேண்டும். இவர்களை மட்டுமல்ல, இவர்களை வைத்து அரசியல் ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் அரசாங்கத்தையும் அதிகார அரசியல் மையங்களையும் வெற்றிகொள்ள வேண்டும். அதற்குரிய நிதானமும் அறிவுக் கூர்மையும் அரசியற் தெளிவும் நமக்கு வேண்டும். அதை நாம் உருவாக்கிக் கொள்வது அவசியம்.

ஆகவே இந்த வரலாற்றுக் கோமாளிகளை நாம் ஒரு போதும் பொருட்படுத்தவே வேண்டியதில்லை. நான்கு நாட்களுக்கு இவர்களைப் பொருட்படுத்தவில்லை என்றால் இவர்கள் கத்திக் களைத்து விடுவார்கள். (22ம் பக்கம் பார்க்க)

# ஏன் மீண்டும் 13வது திருத்தச்சட்டம் பேசு பொருளானது?



கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசுவது தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றது. இன்றைய அரசியல் நிலைமைகளை புரிந்து கொண்டவர்கள் இதனை சரியென்று கூறுகின்றனர். தொடர்ந்தும் இப்படியே சென்றால் நிலைமைகள் மோசமடைந்து விடும் ஏதாவதொரு புள்ளியில் நாம் சந்திக்க வேண்டும். ஆனால் நிலைமைகளை புரிந்து கொள்ள மறுப்பவர்களோ அல்லது புரிந்து கொள்ள விரும்பாதவர்களோ வேறுவிதமாக பேசுகின்றனர்.

இவர்கள் இந்தியாவின் நிகழ்சிநிரலை முன்னெடுக்க விரும்புகின்றனர் - இது ஒரு சாராரின் கருத்து. இவர்கள் தமிழ் மக்களின் சமஸ்டிக் கோரிக்கையை திட்டமிட்டு பலவீனப்படுத்துகின்றனர். இது இன்னொரு சாராரின் கருத்து. கூடுதலாக 13வது திருத்தம் என்றவுடன், இந்தியாவை தொடர்புபடுத்தி சிந்திக்கும் போக்கொன்றே மேலோங்கியிருக்கின்றது. ஏன் 13ஆவது திருத்தச்சட்டம் மீளவும் பேசுபொருளானது?

13 ஆவது திருத்தச் சட்டம் என்றவுடன் முட்டி மோதுவதற்கு காத்திருக்கும் எவரிடமும் இந்தக் கேள்விக்கு பதிலில்லை. ஆகக் குறைந்தது இந்தக் கேள்வியின் அடிப்படையில், சிந்திப்பதற்கு கூட, அவர்கள் தங்களை தயார்படுத்துவதில்லை. 13வது திருத்தச் சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொள்வதை முட்டாள்தனமென்று வாதிட முற்படும் எவருமே, தாங்கள் எவ்வாறானதொரு முட்டாள்தனத்துக்குள் சிக்குப்பட்டிருக்கின்றனர் என்பதை புரிந்துகொள்வதில்லை.

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகின்றன. இந்த காலத்தில் நடைபெற்றவைகள் ஏராளம். ஆனால் அதன் பின்னரும் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசப்படுகின்றதென்றால், அதன் பொருள் என்ன? இந்தக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லப்படும் தமிழர் அரசியல் செயற்பாடுகள் வெற்றியளிக்கவில்லை என்பது தானே! கடந்த 14 வருடகால தமிழ் செயற்பாடுகள் தாக்கம் மிக்கதாக இருந்திருந்தால், 13 ஆவது திருத்தச் சட்டத்தை கையாள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கதல்லவா?

இப்போது 13 ஆவது திருத்தச் சட்டம் பேசப்படுதவதற்கு உண்மையிலேயே யார் காரணம்? வெறுமனே சமஸ்டி பற்றி உளறிக் கொண்டு தங்களின் குடும்ப அலுவல்களை பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் என்போரா அல்லது, இருப்பதையாவது காப்பாற்றுவோம் என்று சிந்திப்பவர்களா?

கடந்த 14 வருடங்களில், 13 ஆவது திருத் தச்சட்டத்தை தாண்டிச் செல்வதற்கான அர்ப்பணிப்பை எவருமே காண்பிக்கவில்லை. உதாரணமாக, விடுதலைப் புலிகள் அரசியலை தீர்மானித்த காலத்தில், 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் மட்டுமல்ல - சமஸ்டி பற்றியும் எவருமே பேசியதில்லை. ஒரு நாடு இரண்டு தேசம் பற்றியும் பேசியதில்லை. ஏன்? ஏனெனில், விடுதலைப் புலிகளின் வெற்றிவாதம் அனைத்தையும் செல்லாக் காசாக்கியது. ஏதோ பெரிதாக கிடைக்கப் போவதான ஒரு நிழல் அனைவரையும் ஆக்கிரமித்திருந்தது. அது உண்மையா அல்லது மாயையா என்பது பற்றிய சிந்திப்பதற்கும் எவருமே தயாராக இருக்கவில்லை.

ஏனெனில், விடுதலைப் புலிகள் என்னும் பிரமாண்டத்திற்கு முன்னால் ஏனைய விடயங்கள் அனைத்தும் பெறுமதியற்றுப் போனது. அப்போதும் யதார்த்தமாக பேசியவர்கள் இருந்தனர் ஆனால் அவர்களை பொருட்படுத்துவதற்கு எவரும் தயாராக இருக்கவில்லை.

விடுதலைப் புலிகள் என்னும் பிரமாண்டம் மறைந்த போது தான், அடுத்தது என்ன என்னும் கேள்வி மேலெழுந்தது. ,ந்தக் கேள்விக்கான பதிலை தரக் கூடியவர்களாக சிலர் தமிழ் சமூகத்தின் முன்னால் காட்சியளித்தனர்.

முதலில் இரா.சம்பந்தன் என்னும் பார்வை மேலோங்கியது. பின்னர் சம்பந்தன் பொருத்தமானவர் அல்ல - அதற்கு மாற்றானவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்று சிலர் வாதிட்டனர். இதற்கிடையில், அரசியலுக்கு புதிதாக வந்த சி.வி.விக்னேஸ்வரன் தொடர்பிலும் சிறிது காலம் அரசியல் காற்று வீசியது. அதுவும் அதிக காலம் நீடிக்கவில்லை. யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடகாலத்தை திரும்பிப் பார்த்தால்,



எவரிடமும் அப்பணிப்பு மிக்க அரசியல் செயற்பாடுகளை காணமுடியவில்லை.. இலங்கையின் ஆட்சியளார்கள் மீது நிர்பந்தங்களை ஏற்படுத்த எவராலும் முடியவில்லை. சர்வதேசம் என்னும் சொல்லும் எதிர்பார்த்த நன்மையை தரவில்லை. அவர்களை தமிழர் பக்கமாக திருப்பும் வல்லமையையும் எவரும் ஜனநாயகத் தளத்தில் நிரூபிக்கவில்லை. இந்த அடிப்படையில் 14 வருட கால தமிழர் அரசியல் செற்பாடுகள் படுதோல்வியையே அடையாளப்படுத்தியிருக்கின்றது.

வேலையே பொன்னம்பலம் அணியினர் முன்னெடுத்தனர். இதன் மூலம் சம்பந்தன் சுமந்திரனை விடவும் தாங்களே, புனிதர்கள் என்னும் அரசியல் மாயையொன்றை ஏற்படுத்துவது ஒன்றே, அவர்களின் ஒரேயொரு இலக்காக இருந்தது. மொத்தத்தில் இரண்டு தரப்புக்களுமே மக்கள் விரோத அரசியலையே முன்னெடுத்தன. உண்மையில் சமபந்தன் தரப்பை குற்றம் சாட்டுபவர்கள், சம்பந்தனின் யதார்த்த விரோத செயற்பாடுகளை முன் வைத்தே, தங்களின் குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்களோ, சாதாரண மக்களின் நலன்களை முன்னிறுத்தியும் சிந்திக்கவுமில்லை, அதே வேளை தாங்கள் கூறியவற்றுக்கான உச்ச பட்சமான அர்ப்பணிப்பையும் நிருபிக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் தொடர்ந்தும் சமஸ்டியென்றும், சர்வதேச விசாரணையென்றும் தமிழ் மக்களை இன்னும் எவ்வளவு காலத்திற்குத்த ான் ஏமாற்றிக் கொண்டிருப்பது?

இதற்கு அடிப்படையான காரணம், எதனை எக்காலத்தில் கையிவெடுக்க வேண்டுமோ, அதனைகையிலெடுக்க தமிழ் கட்சிகள் தவறுகின்றன. 2015 ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து அனைத்து தரப்புகளும் ஓரணியாக 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுத்திருந்தால், நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். அரசாங்கமும் வேறு வழியின்றி சில விடயங்களை செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்குள் தள்ளப் பட்டிருக்கும். ஆனால் அந்த வாய்ப்பை தவற விட்டதால், இன்று நிலைமை மேலும் சிக்கலடைந்திருக்கின்றது. 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்திற்கே கடுமையான நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

13.ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பேசுபவர்களை முட்டாள்களென்று கூறுபவர்களோ, மறுபுறம், சமஸ்டியை அடையும் வழியைச் சொல்லத் தெரியாத முட்டாள்களாக இருக்கின்றனர். தாங்கள் முட்டாள்களாக இருப்பதை மறைப்பதற்காகவே, அவர்களுக்கு சதிக் கோட்பாடுகள் தேவைப்படுகின்றன. 13வது திருத்தச் சட்டத்தை பற்றி எவரேனும் பேசினால் அவர்கள் இந்தியாவின் சம்பளப் பட்டியலில் இருப்பதான கதைகளை மக்கள் மத்தியில் பரப்ப முற்படுகின்றனர். 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் சாதகமாக நோக்க வேண்டுமென்று கூறும் தமிழ் தேசிய அரசியல் வாதிகளுக்கு இந்தியா நிதி வழங்குவதான கதைகளை கூறி, அவர்களின் ஈடுபாட்டை சீர்குலைக்க முற்படுகின்றனர். உண்மையில் இவ்வாறானவர்கள் யார், இவர்களது மக்கள் விரோத

இந்த நிலையில் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திப்பவர்கள் என்ன தான், செய்வதென்னும் கேள்வி மேலெழுந்தது. இதில் இன்னொரு விடயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். யுத்தம் முடிவுற்றதும் இந்தியா தொடர்பான கரிசனை எவரிடமும் இருந்திருக்கவில்லை. இந்தியா வழமை போல் இலங்கை தொடர்பில் பேசுகின்ற போது, 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான தீர்வை உச்சரித்துக் கொண்டிருந்தது. ஆனால் சம்பந்தன் தரப்போ, 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் உச்சரிக்கக் கூட இல்லை.

மாறாக, மகிந்த ராஜபக்ச 13 பிளஸ் என்னும் ஒன்றை உச்சரித்துக் கொண்டிருந்தார். ஆனால் அதிலும் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. 2015,ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, சம்பந்தனும் சுமந்திரனும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசினர். அப்போதும் கூட நிலைமைகளை புரிந்து கொண்டவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை உச்சபட்சமாக பயன்படுத்துமாறு வலியுறுத்தினர். ஆனால் சம்பந்தனோ, 13 ஆவது திருத்தச் சட்டத்தை தாண்டி தாங்கள் அதிக தூரம் சென்று விட்டதாக கூறிக் கொண்டிருந்தார். புதிய அரசியல் யாப்பு மூலம் பிரச்சினைக்கான தீர்வை நெருங்கி விட்டதாக கூறினார்.

இந்தக் காலத்தில், சம்பந்தன் தரப்பின் தவறுகளை சுட்டிக்காட்டும் அரசியலை செய்ய வேண்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பவம் தரப்போ, முற்றிலும் யதார்த்த விரோத அரசியலையே முன்னெடுத்தது. வர முடியாத அரசியல் யாப்பு தொடர்பில் கொள்கை விளக்கமளிக்கும்

இப்படியொரு கேள்வி சற்று வெளியில் முகம் காட்ட ஆரம்பித்தது. யதார்த்தமாக சிந்திக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் பலரும் சிந்திக்கத் தலைப் பட்டனர்.

இந்த பின்புலத்தில் தான், மீண்டும் இந்தியாவை நோக்கி செல்ல வேண்டுமென்னும் கரிசனை முன்னாள் ஆயுத இயக்கங்களின் மத்தியில் பேசுபொருளானது. இந்த பின்புலத்தில் தான், டெலோ 13வது திருத்தச்சட்டத்தை ஆரபப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளும் விவாதத்திற்கு பிள்ளையார் சுழியிட்டது. பின்னர் ஏனைய கட்சிகளும் இந்த முயற்சியில் சங்கமித்தது. இந்த சந்தர்ப்பத்திலும் கூட, இரா.சம்பந்தன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை. மீண்டும் வேதாளம் என்பது போல், இந்திய பிரதமருக்கான கடிதத்தில், தமிழ் கட்சிகள் மூன்றாகப் பிரிந்தன.

இதில் ஒரு அணியினரது, 1.3வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் நிலைப்பாட்டை மலினப்படுத்தும் நோக்கிலேயே, ஏனைய தரப்புக்கள் கடிதங்களை அனுப்பியிருந்தன, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியின் சமஸ்டிக் கதைகள் தங்களின் தேர்தல் அரசியலை பலவீனப்படுத்தி விடுமோ என்னும் அடிப்படையில் தான், தமிரசு கட்சி சிந்திக்கின்றது. ஆனால் இது அடிப்படையிலேயே தவறானது. மக்களுக்கு எது நன்மையோ, அது பற்றி மட்டும் தான், மக்கள் தொடர்பில் சிந்திப்பவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். மக்களை வாழ வைக்கும் முயற்சியில் தமிழ் தேசிய தரப்புக்கள் என்போரால் ,துவரையில் ஆக்கபூர்வமாக எதனையும் நிரூபிக்க முடியவில்லை.

பின்னணி என்ன? இதற்கு பின்னால் சீனாவின் திரைமறைவு நகர்வுகள் இருக்கின்றதா? ஏன் அவ்வாறு நாம் சந்தேகிக்கக் கூடாது?

13வது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவாக ,ந்தியா நிதிவழங்குவது உண்மையானால், 13வது திருத்தத்தை எதிர்ப்பவர்களுக்கு ஏன் சீனா நிதியளிக்க முடியாது? இதன் மூலம் இந்திய எதிர்ப்பு மனோபாவத்தை தமிழ் மக்கள் மத்தியில் கூர்மைப்படுத்துவதற்கு சீனா முயற்சிக்கலாம் தானே! இதற்கு சில சீன முகவர்கள் துணை போகலாம். இந்திய எதிர்ப்பு மனோபாவம் வடக்கு கிழக்கில் பரப்புவதை ஊக்குவிப்பதற்கான முகவர்கள் கிடைத்தால், சீனா நிச்சயம் அவர்களை பயன்படுத்திக் கொள்ளும். நான் தர்க்கரீதியில் தான், இந்தக் கேள்விகளை முன் வைக்கின்றேன் அதாவது, 13வது ஆதரவுக்கு பின்னால் இந்தியா இருப்பது உண்மையாயின், 13 எதிர்ப்புக்கு பின்னால் சீனா இருப்பதற்கான காரணத்தை எவ்வாறு நாம் நிராகரிக்க முடியும்?

13 எதிர்ப்பை முன் வைப்பவர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம். ஒன்று, ஏழை தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் துளியனவும் அக்கறையில்லாதவர்கள். இரண்டு, இந்தியா தொடர்பான சதிக்கோட்பாடுகளை பரப்புவர்கள். மூன்று, சிங்கள தேசியவாத தரப்புக்களின் 13 எதிர்ப்பிற்கு துணை போபவர்கன். நான்கு, அரசியல் தீர்விற்கான முயற்சிகளுக்கு, தமிழ் மக்கள் பக்கத்தில் ஆதரவில்லையென்னும், அரசாங்கத்தின் கருத்துக்கு வலுச்சேர்ப்பவர்கள். இப்போது ரணில் இவ்வாறானதொரு வாதத்தைத் தான் (22ம் பக்கம் பார்க்க)

# கை விடுகிறதா அமெரிக்கா?

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்று சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர், வடக்கில் விரிவான பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

இந்தப் பயணத்தின் போது அவர் அரசியல், பொருளாதார, சமூக, மத விவகாரங்களில் மாத்திரமன்றி, பாதுகாப்பு விவகாரங்களிலும் அதிக அக்கறை செலுத்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த மாதம் 24ஆம் திகதி கிளிநொச்சிக்குச் சென்ற அவர், அங்கு இலங்கை இராணுவத்தின் முதலாவது கோர்ப்ஸ் படையணியின் தளபதியான மேஜர் ஜெனரல் எஸ்.பி.அமுனுகமவைத் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பின் போது இரண்டு முக்கியமான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

அமெரிக்கத் தூதுவர் ஜஜீலி சங்கின் டுவிட்டர் பக்கத்திலேயே இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இலங்கை இராணுவத்துடன் அமெரிக்கா வரையறுக்கப்பட்ட தொடர்புகள் உறவுகளையே பேணி வருகிறது.

குறிப்பாக 2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்பட்ட போர்க்குற்றச்சாட்டுகளை அடுத்து, இராணுவத்துடனான உறவுகளை அமெரிக்கா மட்டுப்படுத்திக் கொண்டது.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த நியாயமான, நம்பகமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் வலியுறுத்தலை அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. அதனால் இலங்கை இராணுவத்துக்கு மனிதாபிமான கண்ணிவெடியகற்றல் பயிற்சிகளை வழங்குவதுடன் அமெரிக்கா தனது உறவுகளை மட்டுப்படுத்திக் கொண்டதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் முன்னர் வெளியிட்ட நாடுகளின் மனித உரிமைகள் நிலைமை குறித்த அறிக்கைகளில் சுட்டிக் காட்டியிருந்தது.

போர்க்குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்று நம்பப்பட்ட படை அதிகாரிகள் பலரை அமெரிக்கா தனது நாட்டுக்குள் நுழைவதற்கும் தடைவிதித்திருக்கிறது.

இலங்கை கடற்படையைப் பலப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகின்ற போதும், விமானப்படையுடன் வலுவான உறவுகளைப் பேணுகின்ற போதும், இலங்கை இராணுவத்துடன் அத்தகைய நெருங்கிய உறவுகளை அமெரிக்காவினால் ஏற்படுத்த முடியவில்லை.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க வேண்டியவர்கள் அல்லது அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க - பொறுப்புக்கூற வேண்டியவர்கள் எனப் பட்டியலிடப்படும் இராணுவ அதிகாரிகள் தலைமைத்துவக் கட்டமைப்புகளில் காணப்பட்டதும் இலங்கை இராணுவத்துக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளில் ஆழமான விரிசல்கள் நீடித்தமைக்கு ஒரு காரணமாகும்.

போர்க் காலத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்றும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதும், அந்த இலக்கை எட்டுவதற்காக அமெரிக்கா பல்வேறு தடைகளை நடைமுறைப்படுத்தி, அழுத்தங்களைக் கொடுத்து வருவதும் விரிசல்களுக்கு முக்கிய காரணம்.

இவ்வாறானதொரு பின்னணி நிலையிலேயே, வடக்கிற்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க தூதுவர், கிளிநொச்சியில் இராணுவத்தின் முதலாவது கோர்ப்ஸ் படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அமுனுகமவுடன் கலந்துரையாடலை நடத்தியிருக்கிறார்.

இந்தக் கலந்துரையாடல் இரண்டு முக்கிய விவகாரங்களை மையப்படுத்தியிருந்தது. ஒன்று - இராணுவத்தை நவீனமயப்படுத்தும், இலங்கையின் முயற்சிகள் உள்ளிட்ட, பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான அமெரிக்காவின் பகிரப்பட்ட கடப்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டிருக்கிறது.



இரண்டு-நிலையான அமைதியைக் கட்டியெழுப்புவதற்கு, சிறுபான்மை சமூகங்களுடன் நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா கடந்த ஒன்றரை தசாப்தங்களில் நிலையான அமைதி தொடர்பாக பல்வேறு தரப்புகளுடன் கலந்துரையாடியிருக்கிறது. இப்போது, முதல்முறையாக இராணுவத்தின் படையணி மட்டத்துக்கு அந்த விவகாரத்தைக் கொண்டு சென்றிருக்கிறது. அது போலவே, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இராணுவத்தை நவீனமயப்படுத்துவது குறித்தும் இப்போது புதிதாக கவனம் செலுத்த தொடங்கியிருக்கிறது. அதனையும் கொழும்பில் இருந்து முன்னெடுக்காமல், இராணுவத்தின் பிரதான படையணி மட்டத்துக்கு கொண்டு சென்றிருக்கிறது.

இராணுவத்தின் முதலாவது கோர்ப்ஸ் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் அமுனுகமவுடன், அமெரிக்க தூதுவர் ஜஜீலி சங் பேச்சு நடத்திய இந்த இரண்டு விடயங்களும், ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை.

கடந்த ஒன்றரை தசாப்தங்களாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படுகின்ற விரிசல்களை சரிப்படுத்தும் அமெரிக்காவின் விருப்பத்தையும் இது வெளிப்படுத்துவதாக உள்ளது.

மனித உரிமைக் காரணங்களை சுட்டிக் காட்டி, பொறுப்புக்கூறலை வலியுறுத்தி இலங்கை இராணுவத்திடம் இருந்து விலகியிருந்த அமெரிக்கா, இப்போது தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முற்படுகிறதா என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது.

இராணுவத்தை நவீனமயப்படுத்தும் இலங்கைக்கு அமெரிக்கா உதவ முற்படுவதாக தெரிகிறது. அதற்காக இராணுவத்துடன் கீழ்மட்ட உறவுகளை பலப்படுத்த முற்படுகிறது.

இலங்கை கடற்படையின் மெரைன் படைப்பிரிவுடன் அமெரிக்கா கூடுதல் தொடர்புகளை பேணி வருவது கண்கூடு. அவ்வாறே அமெரிக்கா முதலாவது கோர்ப்ஸ் படையணியுடன் தொடர்புகளை உருவாக்க முற்படுகிறதா என்ற கேள்வியும் உள்ளது. மெரைன் படைப்பிரிவை உரு வாக்கியது போல இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவுக்கும் பயிற்சிகளை வழங்கியதும் அமெரிக்காதான்.

முதலாவது கோர்ப்ஸ்ஸில் இடம்பெற்றுள்ள விசேட படைப்பிரிவு மற்றும் 53 ஆவது டிவிசன் ஆகியன, முன்னர் அமெரிக்க இராணுவ அதிகாரிகளால் பயிற்சியளிக்கப்பட்டவை.

கிறீன் பெரட்ஸ் என்ற அமெரிக்காவின் சிறப்புப் படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள், 1997இல், குருலேகங்கவில் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கினர். 2000ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளம் புலிகளால் முற்றுகையிடப்பட்ட போது, அது கடைசி வரையில் வீழ்ந்துவிடாது என்றே அமெரிக்க அதிகாரிகள் நம்பியிருந்தனர்.

தங்களால் பயிற்சியளிக்கப்பட்ட 53 ஆவது டிவிசன் படையினர் அங்கு நிலைகொண்டிருப்பதால், அவ்வாறான நிலை ஏற்படாது என்று அவர்கள் நம்பினர்.

ஆனால், அந்த நம்பிக்கையை உடைத்து, ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றியமை வரலாறு. அதற்குப் பிற்பட்ட காலங்களில் அமெரிக்கா இலங்கை இராணுவத்தினருக்கு பெரியளவில் பயிற்சிகளை வழங்கியிருக்கவில்லை. இப்போது இராணுவத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு அமெரிக்கா ஒத்துழைக்கக் கூடும்.

ஆனால், அதற்கு சில தடைகள் இருக்கின்றன. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மனித உரிமைகள் விவகாரத்தில் அமெரிக்கா கடும் போக்கை கடைப்பிடித்து வந்திருக்கிறது. இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று வலியுறுத்தி, ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் தீர்மானங்களை முன்னின்று கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது.

இந்த தீர்மானங்களால் இதுவரையில், பொறுப்புக்கூறல் இலக்கை அடைய முடியவில்லை என்பது வேதனையான உண்மை.

இவ்வாறான நிலையில் திடீரென இலங்கை இராணுவத்துடன் அமெரிக்கா நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முயன்றால், அது தவறானதொரு விம்பத்தை காண்பிக்கும். பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்து போவார்கள், அமெரிக்காவின் மீது நம்பிக்கையீனம் ஏற்படும்.

இவ்வாறான நிலையில் தான் அமெரிக்கத் தூதுவர் இரண்டாவது விடயத்தை முன்வைத்திருக்கிறார். சிறுபான்மை சமூகங்களுடன் நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம் நிலையான அமைதியை அடைய முடியும் என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தின் ஊடாக, இராணுவத்தினர் சிறுபான்மை சமூகங்களுடன் குறிப்பாக தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பவில்லை என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

அதேவேளை, இவ்வாறு நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம், இராணுவத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பை வழங்க முடியும் என்று கூறியதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும், இதனை அவர் ஏன், கிளிநொச்சியில் போய், இராணுவத்தின் முதலாவது கோர்ப்ஸ் முன்னிலையில் கூற வேண்டும்? அதுதான் முக்கியமான கேள்வி.(22ம் பக்கம் பார்க்க)



இலங்கையின் அரசியல் பரப்பில் அதிக மாற்றங்கள் நிகழ்ந்து வருகிறது. தென் இலங்கை மரபார்ந்த இந்திய எதிர்ப்பு வாதத்தை கொண்டு இயங்குகிறது. அந்தகைய எதிர்புணர்வானது தமிழர்கள் மீதான நெருக்கடியை மீளவும் உருவாக்கும் என்ற எச்சரிக்கை இந்திய புலனாய்வுத் துறையே முன்னிலைப் படுத்தி வருகிறது.

குருத்தூர்மலை விவகாரத்தினை மையப்படுத்தி இனங்களுக்கிடையே முரண்பாடு மீளவும் ஏற்படலாம் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் இந்தியாவுக்கும் ,லங்கைக்கும் தரைப்பாதை அமைப்பதிலிருந்து தொடங்கிய முரண்பாடு படிப்படியாக தமிழர் வாழ்விடம் சார்ந்து வளர்ந்து வருகிறது.

பதின்மூன்றாவது திருத்தத்தினை முழுமையாக அமுலாக்கலும் அதில் இந்தியாவின் பங்களிப்புப் பற்றியுமே முரன்பாட்டின் தொடக்கம் அமைந்திருந்தது. அது வளர்ந்து குருர்தூர்மலை விவகாரமாக காட்சிப்படுத்தப்படுகிறது. ஆனால் அடிப்படையில் இந்தியாவின் செல்வாங்கு வார்ந்து விடக் கூடாது என்பதே பின்னாலுள்ள வலுவான காரணமாகும். இதனை ஆட்சியாளர்கள் கையான இந்தியாளையும் அரவணைத்துக் கொண்டு சீனாவையும் துணைக்கு வைத்துக் கொள்ள முற்படும் போக்கு அண்மையில் அதிகரித்து

மீட்புப் பணிகளை மேற்கொள்ளல் என பலவிடயங்களில் பங்களிப்பினை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. கடல் மாசுபாட்டை தடுக்கவும் உதவியுள்வதாக அறிக்கை செய்துள்ளது.

இதே நேரம் சீனாவின் ஆய்வுக்கப்பலான ஷியான் – 6, 25ஆம் திகதி வருகை தர



வுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ,து 47 நாட்கள் தங்கியிருந்து ஆய்வுகளை கடல்பகுதியில் மேற்கொள்ளும்

நோக்குவது அவசியமானது.

ஒன்று, இந்தோ பசுபிக் சூழலில் இலங்கையின் பாதுகாப்பு நங்கூரம் இந்தியா என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்தமொறகொட ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். கொழும்பும் புதுடில்லியும் சிறப்பு

உறவை பகிர்ந்து கொள்கிறது. அதனை ஏனைய நாடுகளின் இரு தரப்பு உறவுடன் ஒப்பிடமுடியாது எனக் குறிப்

தெரிகிறது.

இரண்டு, இலங்கை அரசாங்கம் சீன ஆய்வுக் கப்பலான ஷியான் –6இன் இலங்கைத் துறைமுகத்திற்கான நுழைவுக்கு அனுமதி வழங்காதுள்ள நிலையை ஊடகங்கள் வாயிலாக பெரிதுபடுத்தியுள்ளது. இத்தகைய செய்முறையை வழமையாகக் கொண்டுள்ளது. யுனான் வாங் – 5 வருகையின் போதும் இவ்வாறே இந்தியாவை இலங்கை கையாண்டது. ஆரம்பத்தில்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– T.K.கணேசலிங்கம் –



நிராகரித்து விட்டு பின்னர் இந்தியாவின் ஒப்புதலுடன் அனுமதிப்பது போன்று செயல்பட முனைகிறது. அதனை சீனாவும் விரும்புவதாகதே தெரிகிறது. காரணம் சீனா இந்தியாவுடன் அதிக மோதல் போக்கினை தற்போது மேற்கொள்ள விரும்பாமையேயாகும். பிரிக்ஸ் அமைப்பு மற்றும் ங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பன சிறப்பான தகவலாகவுள்ளது. இரு நாடுகளும் நெருக்கமான வளர்ச்சியையே அதிகம் முதன்மைப் படுத்துவது போல் தெரிகிறது. இதனால் இரு நாடுகளதும் அணுகுமுறைகளும் மென் போக்குடையதாக அமைந்துள்ளது. அதனை இலங்கை ஆட்சியாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தியாவை முதன்மைப்படுத்தி சீனாவையும், சீனாவை முதன்மைப்படுத்தி இந்தியாவையும் கையாளுகின்றனர். ஆனால் இறுதியில் சீனா பக்கமே இலங்கை ஆட்சியாளர்கள் செயல்பட முனைவார்கள் என்பது கடந்த கால இலங்கையின் வெளியுறவு தெளிவுபடுத்துகிறது.

இதனை மீறி இந்தியா இலங்கைத்தீவில் நிலையான இருப்பி னைத் தக்க வைக்க வேண்டுமாயின் இராணுவப் பிரசன்னத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கான வாய்ப்பு மிக அரிதானது. காரணம் சீனாவின் இராணுவத்தின் ஒத்துழைப்பு இலங்கையில் ஏதுவானதாக அமையும் போது இந்தியாவின் நகர்வு பலவீனமானதாகவே அமையு வாய்புள்ளது.

மூன்று. இத்தகைய கையாளுகைக்குள்ளாய் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை அதிகரிக்க முடியுமென்ற அனுபவத்தை தென் இலங்கை ஆட்சியாளர்கள் கொண்டுள்ளனர். தென் இலங்கை ஆட்சியாளர்கள் 1956இல் இந்தியாவுடன் மிக நெருக்கமாக இருந்து கொண்டே தனி சிங்களர் சட்டத்தை சாத்தியப்படுத்தினர். 1983இல் மட்டுமே ஒரு நெருக்கடியை எதிர் கொண்டனர். பின்னர் அதிலிருந்தும். அனுபவங்களை கற்று விட்டார்கள்.

தற்போது மீண்டும் இந்தியாவுடன் நெருக்கமும் ஒத்துழைப்பையும் அதிகரிக்க.பொளம் திட்டமிடலும் பக்கத்தில் நெருக்கடி நிலைக்கான சூழலை உருவாக்கி வருகின்றனர். தமிழர்களை ஒடுக்குவதற்காகளே இந்தியாவுடன் ஒத்துழைப்பதும் பின்னர் அதனை முறித்துக் கொள்வதும் இலங்கை அரசியலின் மரபாக உள்ளது.

எனவே இந்திய நவனுக்குள் இலங்கைத் தீவின் அரசியல் அகப்பட்டுள்ளது என்ற விவாதத்தை விட இலங்கைத்தீவின் நலனுக்கும் சீனாவும், இந்தியாவும் உட்படுத்தப்பட்டுள்ளன என்பதே யதார்த்தகமாகத் தெரிகிறது. இதில் இந்தியாவைக் காட்டிலும் சீனாவே தென் இலங்கையின் பாதுகாப்பு உத்தரவாதமானது. சீனா இந்தியாவை முதன்மைப்படுத்துவதென்பது அதனை கையாளுவதற்கானதே தவிர அது இந்தியாவுக்கு கொடுக்கும் முதன்மையல்ல.

# இலங்கையின் தேசியப் பாதுகாப்பு:- இந்தியாவிடமா? சீனாவிடமா?

ள்ளது. மறுபக்கத்தில் தீவிரத் தன்மையுடையவர்களை தமிழருக்கு எதிராக தூண்டி விடுவதும் அத்தகைய தீவிர போக்குடைய அரசியல்வாதிகள் மற்றும் பௌத்த மதவாதிகளது உரைகளையும் அறிக்கைகளையும் மௌனமாக கடந்து செல்வதை வழமையான அரசியலாக அரசாங்கம் கொண்டுள்ளது.

இக்கட்டுரையும் உள்நாட்டில் எழுந்துள்ள அரசியல் பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் இந்தியாவிடமிருந்து கடல் கண்காணிப்பு விமானங்களையும் சீனாவிடமிருந்து தகவல் தொழிநுட்ப வளங்களையும் இராணுவ பயன்பாட்டுக்காக அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதன் உள்ளார்ந்த அரசியலை தேடுவதாக அமையவுள்ளது.

16.08.2023 அன்று இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தை முதன்மைப் படுத்திக் கொண்டு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்காவிடம் டோர்வியம் –228 என்ற கடல் சார் விமானத்தை உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது. கடந்த வருடம் கையளிக்கப்பட்ட டோர்னியர் கண்காணிப்பு விமானம் பராமரிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதன் பிரகாரம் மாற்று கண்காணிப்பு விமானம் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு தொடக்கம் இடையில் நிழ்ந்த பேச்சுக்களின் விளைவாக கண்காணிப்பு விமானங்களை இலங்கைக்கு வழங்குவததென இணக்கப்பாடு எட்டப்பட்டது. இது இலங்கையின் கடல் கண்காணிப்பினை மேற்கொள்ள வேண்டிய திறன்களை வலுப்படுத்துவதே நோக்கம் என இந்தியத்தரப்பு அறிவித்துள்ளது. இதனை இரு வருடங்களுக்கு இலவசமாக வழங்குவதென வும் தெரியவ ருகிறது.

இத்தகைய அடிப்படையில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் கோபால் பாக்லேவால் கட்டுநாயக்காவிலுள்ள விமான படைத் தளத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இது பற்றி ஜனாதிபதி ஊடகப்பிரிவு இத்தகைய விமானங்களின் கண்காணிப்பின் மூலம் இலங்கையின் வான்வெளி மற்றும் பிரத்தியோக பொருளாதார வலயத்தை பாதுகாத்தல் கண்காணித்தல், தேடல்,

எனவும் அது நாரா நிறுவனத்துடன் இணைந்து இலங்கையின் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும் எனவும் இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. றுகுணப் பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டின் பிரகாரமே இவ்வாய்வுக் கப்பல் வருகை தந்துள்ளதாக நாரா எனும் தேரிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஷியான் கடந்த வருடம் ஏப்ரலில் வருகைதந்து 30 நாட்கள் தரித்திருந்து ஆய்வுகளை மேற் கொண்டுள்ளதாக நுகுணப் பல்கலைக்கழக கடல்சயம் தொழில்நுட்பம் பீடம் தெரிவித்துள்ளது. இது பற்றி இந்தியா தனது அதிருப்தியை இராஜதந்திர மட்டத்தில் அறிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

6.2 மில்லியன் டொலர் பெறுமதியான 11 இராணுவ வாகனங்கள் (Emergency Command and Communication System Vehicle Fleet) (11 automobiles) San தேசிய பாதுகாப்பு அமைச்சு இலங்கைக்கு (22.08.2023) வழங்கியுள்ளது. இலங்கை இராணுவத்தின் உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் விசேட கடமைக்கு ஈடுபடுத்துவதற்கு இந்த வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. அதிநவீன தகவல் தொடர்பு தளங்களைக் கொண்ட இவ்வாகனங்கள் இராணுவ நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டதென்பது கவனத்திற்குரியதாகும்.

இது இலங்கை இராணுவத்தின் உள்நாட்டுப் பாதுகாப்பை விருத்தி செய்வதே நோக்கம் எனவும் சீனத் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இவற்றை அவதானிக்கும் போது இலங்கை அரசாங்கம் அதிக இராணுவத் தேவைகளை கொண்டுள்ள சூழலில் செயல்படுவது போலவே தெரிகிறது. இவ்வாறு இலங்கை இராணுவத் தேவைகளை அதிகம் கொண்டுள்ளதாக காட்டப்படுவது கவனத்திற்குரியதாகும்.

சீனாவும், இந்தியாவும் இலங்கையில் ஓர் இராணுவ வலுவுள்ள நாடாக மாற்ற முனைவது எதற்கானது என்பது பிரதான கேள்வியாகும். அதனை விரிவாக

பிட்டுள்ளார். மேலும் அவர் இலங்கையின் மூலோபாய இருப்பிடம் மற்றும் இந்திய நிலப்பகுதிக்கு அருகாமையில் அமைந்திருப்பதனால் கொழும்பின் பாதுகாப்பு நலன்கள் புதுடில்லியின் நலன்களுடன் இணைந்திருக்கிறது. அதனால்தான் இலங்கை இந்தியாவை நங்கூரம் என்று அடையாளப்படுத்திக் கொள்கிறது. இதனால் இலங்கை வாழக் கற்றுக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். அனைத்து நெருக்கடியிலும் இந்தியா இலங்கைக்கு பாதுகாப்பளித்துள்ளது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போதும் இராணுவ ரீதியான நெருக்கடி நிலவிய போதும் இந்தியாவே பாதுகாப்பளித்துள்ளது என்பதை தூதுவர் மொறகொட மட்டுமல்ல அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

அவ்வாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் மீள மீள அதனை வலியுறுத்துவதன் மூலம் இந்தியாவை திருப்திப்படுத்துகிறார்கள். இந்திய ஆட்சியாளர்களை குளிர வைக்கிறார்கள். இந்திய ஆட்சியாளரும் அதனை அதிகம் நம்புவதாகவே தெரிகிறது. இவ் ஆட்சியாளர்கள் இந்தியாவை இலங்கையின் நங்கூரம் என்று கூறிக் கொண்டு சீன போர்க் கப்பல்களை நீர்மூழ்கிகளையும் கொழும்புத் துறைமுகத்திலும் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்திலும் நங்கூரமிட வழி விடுகிறார்கள். (Sri Lanka's Defense Anchor India) தொடர்ச்சியாக சீனாவின் இராணுன் நகர்வுகள் நிகழுகிறது.

இலங்கைத்தீவில் பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வராத நிலையில் இராணுவத்தின் அளவையும் அதன் வலுவையும் சர்வதேச நாணய நிதியம் குறைக்குமாறு கோரிய போதும் அதற்கான எந்த நகர்வுமின்றி அரசாங்கம் செயல்படுகிறது. இலங்கைக்கு கடன் கொடுப்பதில் அதிக கவனம் கொண்டுள்ள இரு நாடுகளுமே இலங்கையின் பாதுகாப்பில் அக்கறை செலுத்தி வருகின்றன. மாறாக இரு நாடுகளும் பரஸ்பரம் தமது இராணுவ கண்காணிப்பினை மற்றைய நாடு மீது அதிகரித்து வருவதாகவே

# இலங்கைத் தமிழர் சிங்கப்பூரின் ஜனாதிபதியானார்!



சிங்கப்பூர் மக்கள் எனக்கு அளித்துள்ள ஆதரவுக்கு உண்மையிலேயே மதிப்பளித்து அதனை காப்பாற்றுவேன். எனக்கு அளிக்கப்பட்ட வாக்கு சிங்கப்பூருக்கு அளிக்கப்பட்ட வாக்காகும் என காத்திருந்து அடைந்த தேர்தல் வெற்றிக்களிப்பில், 70.4 சதவீத சிங்கப்பூர் மக்களின் ஏகோபித்த வாக்குகளை பெற்று, சிங்கப்பூர் நாட்டின் 9ஆவது ஜனாதிபதியாக தெரிவான தர்மன் சண்முகரட்னம் தெரிவித்தார்.

கடந்த கால சிங்கப்பூர் அரசியல் பதிவுகளின்படி, முதல் முறையாக ஒரு தமிழர் ஜனாதிபதியாக சிங்கப்பூர் மக்களால் தெரிவு செய்யப்பட்டது 1999ஆம் ஆண்டிலாகும். 1999இல் இந்திய தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த செல்லப்பன் ராமநாதன் சிங்கப்பூரில் ஜனாதிபதியாக பதவியேற்றார். நீண்ட காலமாக அந்நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்த ஆட்சியாளராக அவர் கருதப்படுகிறார். அவருக்கு பிறகு, இலங்கை வம்சாவளியை சேர்ந்த ஒரு தமிழர் சிங்கப்பூரின் ஜனாதிபதியாகியிருப்பது இதுவே முதல் முறை.

அந்த வகையில், சிங்கப்பூரின் புதிய ஜனாதிபதியான தர்மன் சண்முகரட்னம் இலங்கை மண்ணைச் சேர்ந்த தமிழர் என்பதில் பெருமையே. தற்போதைய சிங்கப்பூர் ஜனாதிபதியாக பதவி வகித்துக் கொண்டிருக்கும் ஹலிமா யாக்கோபின் பதவிக் காலம் செப்டம்பர் 13ஆம் திகதியோடு நிறைவடைகிறது.



இந்நிலையில், புதிய ஜனாதிபதி தெரிவுக்கான தேர்தல் அறிவிக்கப்பட, ஜனாதிபதி வேட்பாளர்களாக தர்மன் சண்முகரத்னம் (66), இங் கொக் சொங் (76), டான் கின் லியான் (75) ஆகிய மூவரும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். அதனையடுத்து, ஜனாதிபதி தேர்தலுக்கான மக்கள் வாக்கெடுப்பு செப்டெம்பர் 1ஆம் திகதி நடத்தப்பட்டது.

இம்முறை சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு சிங்கப்பூர் வாழ் மக்கள் மட்டுமன்றி, வெளிநாடுகளில் வசிக்கும் சிங்கப்பூரைச் சேர்ந்த மக்களும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன்படி, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் உள்ள 10 நகரங்களில் அந்நாடுகளில் வசிக்கும் சிங்கப்பூர் மக்களும் தேர்தலில் வாக்களிப்பதற்கான நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. வாக்கெடுப்பு நிறைவில் வாக்குகள் எண்ணப்பட்டு, 01 செப்டம்பர் 2023 முடிவுகள் வெளியாயின.

அதன்படி, 70.4 சதவீத வாக்குகளை பெற்று 9ஆவது சிங்கப்பூரின் ஜனாதிபதியாக யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட தமிழரான தர்மன் சண்முகரட்னம் தெரிவாகியிருப்பதாக சிங்கப்பூர் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்தது.

ஜனாதிபதி தேர்தலை சந்திப்பதற்கு முன்னர் சிங்கப்பூரில் தமிழ் முரசு பத்திரிகையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஒரு கலந்துரையாடல் நிகழ்வில் சிங்கப்பூரின் எதிர்காலம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன். ஒவ்வொரு சிறு குழந்தையும், அவர்களின் பின்னணியை பொருட்படுத்தாமல், அவற்றை கண்டறிய ஒரு நல்ல வாய்ப்பு உள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சமூக இயக்கம் சிங்கப்பூர் யதார்த்தத்தின் ஒரு பகுதியாக இருப்பதை உறுதி செய்ய நாம் அதிகம் செயலாற்ற வேண்டும். இரண்டாவதாக, நமது கலாசார அடையாளத்தை ஆழப்படுத்த, நாங்கள் மிகவும் செயற்பாட்டுடன் இருக்க வேண்டும். நாங்கள் பேசும் பாணி, அடுத்த கட்டம் அந்த பன்முக கலாசார அடையாளத்தை ஆழமாக்குகிறது என்று கூறிய தர்மன் சண்முகரட்னம், தற்போது அடைந்திருக்கும் ஜனாதிபதி பதவியை, சிங்கப்பூரின் எதிர்காலத்துக்கான தனது இலக்கினை கண்டறிந்து பயணிப்பதற்கு அந்நாட்டு மக்கள் அளித்த ஒரு வாய்ப்பாக கருதுகிறார்.

குறித்த நிகழ்வில், `ஆரோக்கியமான ஆட்சி தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படும். ஆனால், அந்த அனைத்து கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டியது அவசியம். இதில் அதிகமானோர் அல்லது அனைவரும் எதில் இணங்கி இருக்கிறார்களோ, அதை வேறுபாடுகளுக்கு இடையிலான பாலமாக பயன்படுத்தி இணைப்புகளை வலுப்படுத்த வேண்டும்` என தர்மன் தெரிவித்ததற்கிணங்க, அந்நாட்டினதும் சிங்கப்பூர் மக்களினதும் சுபீட்சத்துக்கான தனது கனவு அரசியலை நிறைவேற்றும் பொருட்டு, ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்து, அவர் ஆற்றவுள்ள பணிகள், முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளும் தொடர்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

தர்மன் 1957ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்தவர். எனினும், அவர் இலங்கையின் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர். அவரது பாட்டனார் யாழ்ப்பாணத்தின் ஊரெழு பிரதேசத்தையும், பாட்டி இணுவில் பகுதியையும் சேர்ந்தவர்கள். தர்மனின் தந்தையான சண்முகரட்னம் ஒரு மருத்துவ பேராசிரியராக கடமையாற்றியவர் ஆவார்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் ஆங்கிலோ சீனக் கல்லூரியில் கல்வி கற்று, லண்டன் பொருளியல் கல்லூரியில் பட்டம் பெற்றார். தொடர்ந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ஹார்வர்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் பொருளியல் துறையில் முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார். இவர் ஜப்பானிய – சீன வழக்கறிஞரான ஜேன் யுமக்கோ இட்டோகி என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு தற்போது ஒரு பெண், மூன்று ஆண்கள் என நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

சிங்கப்பூரில் பொருளாதார நிபுணராக விளங்கிய இவர், அரசு முன்னெடுத்த பல முக்கிய சேவைகளில் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி சார்ந்து பல்வேறு விதமாக பங்காற்றியுள்ளார். சிங்கப்பூரில் தனக்கான அரசியல் அத்தி வாரத்தை கடந்த சுமார் 22 வருடங் களாக வலுப்படுத்தி வரும் தர்மன் 2001ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்தார். 2001இல் வணிகத்துறை அமைச்சில் மூத்த மாநில அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

2003 முதல் 2008 வரை கல்வி அமைச்சராக கடமையேற்றிருந்த இவர், 2007 இல் நிதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டு 2015 வரை அப்பதவியில் கடமையாற்றினார். 2002ஆம் ஆண்டு மக்கள் செயல் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 2011இல் சிங்கப்பூரின் துணை பிரதமராகவும் பதவியேற்று, 2019 வரை கடமையாற்றி வந்தார்.

2023 சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எந்தவொரு கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருவராக இருக்கக்கூடாது என்கிற அந்நாட்டு தேர்தல் சட்டத்துக்கமைய, வேட்பாளராக களமிறங்கிய தர்மன் ஆளுங்கட்சியிலிருந்து விலகினார். கட்சி சாரா நபராக தனது கொள்கைகளை மட்டுமே முன்னிறுத்தி தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்த தர்மன், தனக்கான வெற்றி குறித்த நிலைப்பாட்டை முன்னதாகவே பதிவு செய்திருந்தார்.

அதன் அடிப்படையில் மக்கள் சார்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் ஆட்சி மாற்றம், அதனால் விளையப்போகும் உயரிய குறிக்கோள் குறித்து தெரிவித்திருந்தார். தர்மன், பல தரப்பட்ட பார்வைகளையும், மாறி வரும் அரசியல் சூழலையும் கொண்ட சமூகத்துக்கு ஒற்றுமையின் சின்னமாக வும் அனைவரையும் ஒன்றுபடுத்தக் கூடிய வராகவும் ஜனாதிபதி திகழ்வது முக்கியம்.

சிங்கப்பூரின் அடுத்த கட்ட வளர்ச்சியை பொறுத்த வரையில், ஜனாதிபதி பதவியில் ஒரு வேறுபட்ட பண்பு தேவைப்படுகிறது. அதுவே நான் இந்த தேர்தலில் போட்டியிட காரணமாக இருக்கிறது.


என்னுடைய கடந்த கால செயற்பாடு, என் வாழ்க்கையின் நோக்கம், சிங்கப்பூரின் அடுத்தகட்ட வளர்ச்சியில் என்னால் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பவற்றின் அடிப்படையில் தான் நான் போட்டியிடுகிறேன்` என்று உறுதிபட மக்களிடத்தில் வெளிப்படுத்தியவர் இன்று சிங்கப்பூரின் புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இன ஒற்றுமை உணர்வாலும் கொள்கைகளாலும் பலமான சமூகப் பின்னணியாலும் வலுப் பெற்றுள்ள தர்மனின் செயற்றிட்டங்கள், கொள்கைகள், அவர் உத்தியோகபூர்வமாக பதவியேற்றதன் பின்னரான காலங்களில் அந்நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை வளமாக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்...!





Beauty Learning Academy
AGA
Canada
Presents
Miss Tamil Universe 2023
TITLE SPONSOR
MUHURTHAM JEWELS
INVITATION
Co Presents
VIBRANT HOSPITALITY GROUP
POWERED BY
SOUTHERN AROMA
POWERED BY
Chapel Ridge
ASSOCIATE SPONSER
VASANTI
Cosmetic
ASSOCIATE SPONSER
WGID Inc
Miss Tamil Universe
Live Show & Dinner
Registration at 5.00 pm.
Program starts at 6.00 pm.
September 22nd 2023
Scarborough Convention Center
Toronto, Canada
20 Torham Pl, Scarborough
on M1X0B5, Canada
Come and be the witness of the coronation of Miss Tamil Universe 2023
Contact : +1 (416) 677 5511


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே1 எல்லா வற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங் கலில் இருந்த பிரச்னை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளி யூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதக மாக இருக்கும். தொழில் வியாபாரம் லாப கரமாக நடக்கும். உத்யோகத்தில் மேலதி காரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்பை பெறு வீர்கள்.





ரிஷபராசி அன்பர்களே! தடை பட்டு வந்த காரியங்கள் சாதக மாக நடந்து முடியும். எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி கள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர் கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் திரு மணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! எதை யும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல் படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவன த்துடன் வைப்பது நல்லது. தொழில் வியா பாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக் கும். எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக் கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.





கடகராசி அன்பர்களே! ஆராய் ந்து செய்யும் காரியங்கள் சாதக மான பலன் தரும். ஆயுதங்கள் கையாளும் போதும் வாகனங் களை ஓட்டும் போதும் எச்சரி க்கை அவசியம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக் கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களு க்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்.





சிம்மராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென் றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்யோகத்தில் இருப் பவர்கள் அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வேலை செய்யும் இடத்திலும் மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். உடல் ஆரோக்கியம் பெறும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் முன்னே ற்றம் காணப்படும். பல தடைகளை தாண்டி செயல்பட வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல் படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் இரு ந்த பிரச்னை குறையும்.




துலாம்ராசி அன்பர்களே! ஏதா வது ஒரு வகையில் நன்மை நடை பெறும். மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேல் அதிகாரிகளின் பாராட்டு களை பெறுவார்கள்.குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும் சகோதரர்கள் வழியில் ஏதாவது பிரச்னை தலை தூக்க லாம்.





விருச்சிகராசி அன்பர்களே! குறிக் கோள் இன்றி வீணாக அலைய நேரிடும். செலவும் அதிகரிக்கும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள்.








தனுசுராசி அன்பர்களே! காரியங் களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தை க்கு வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. உங்களது உடமைகளை கவனமாக பார் த்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப் படும்.




மகரராசி அன்பர்களே! பல வகைகளிலும் நன்மை உண்டா கும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பணவரத்து அதிகரிக் கும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். ˙. கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். தொழிலில் மரியாதையும், அந்தஸ் தும் அதிகரிக்கும். அரசாங்கம் தொடர் பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும்




கும்பராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரி யத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர் கள். தாமதமான காரியங்கள் வேகம் பிடிக் கும். வீண்கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார் ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது




மீனராசி அன்பர்களே! எதிர் பார்த்த காரிய வெற்றி உண் டாகும். புத்திசாதுரியத்தால் எதையும் செய்து முடிக்க முடி யும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கை கொடுக்கும். பணவரத்து தாமதப்படும். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மைதரும். தொழில் வியா பாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# எது வரலாறு?

(16ம் பக்கத் தொடர்ச்சி) தங்களை யாரும் பொருட்படுத்தவில்லை என்று சோர்ந்து போவார்கள். ஆனால் எதிர்ப் புள்ளியில் இருக்கும் இனவாதிகள் அப்படி செய்ய மாட்டார்கள். அவர்களும் இதைத் திட்ட மிட்டுச் செய்கிறார்கள். பிறகெப்படி இதைப் புறக்கணிப்பார்கள்? ஆகவே தான் இதற்கு மறுத்தான் கொடுக்கிறோம் என்று நமது தமிழ் வீரர்களும் கத்து கிறார்கள்.

இதற்காக ஒவ்வொரு கட்சியும் ஒரு சமூக மும் தமக்குள் தீவிர நிலைச் சக்திகளை வைத்துப் பராமரிக்கின்றன. இலகுவான வழியில் அரசியல் ஆதாயத் தைப் பெறுவதற்கான வழியாக அவை இந்தத் தீவிரவாதிகளை ஊக்குவிக்கின் றன. என்பதால் தான் இதைக் கண்டித்துக் கட்டுப்படுத்தாது விட்டு விடுகின்றன.

ஊடகங்களுக்கும் இனவாதிகளுக்கும் எப் போதும் எதிர்த்துக் களமாடுவதற்கு சில வாய்கள் வேண்டும். அவை அதைப் பிடித்துத் தொங்கிக் கொள்ளும். அதில் தானே அவற்றுக்கும் லாபம் கிடைக்கும். என்பதால் தான் இவர்கள் (இருதரப்பும்) அவிழ்த்து விடும் வரலாறு பற்றிய கதை யாடல்களையும் கட்டுக் கதைகளையும் குறித்து நாம் கவனமாக இருக்க வேண் டும் என்கிறோம்.

ஏனென்றால் இவர்களின் ஆபத்தான இந்தச் செயற்பாடுகளை நாம் எளிதில் கடந்து செல்ல முடியாது. இவர்கள் விதைக்கின்ற விசம் மிகப் பயங்கரமானது. ஆயிரமாயிரம் வெடிகுண்டுகளுக்குச் சமம். இவர்கள் தூண்டுகின்ற இன வாதத்துக்கு பலியாகுவது மக்களாகிய நாமே!

இதேவேளை இந்தச் சூழலில் எந்த வரலா ற்று அறிஞரும் வரலாற்று ஆசிரியர்களும் தமிழ் சிங்களத் தரப்புகளுக்கு இடையில் நிகழும் வரலாற்றுப் புளுகுப் போர்களைப் பற்றி எதுவுமே பேசாதிருக்கின்றனர் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர்களுடைய அறிவுபூர்வமான சொல்லை அறிவுரைகளை ஆய்வு முடிவுகளை இந்த இனவாதிகள் பொருட் படுத்த மாட்டார்கள். அவற்றுக்கு மதிப் பளிக்கவும் மாட்டார்கள் என்பதால் தான் வரலாறு பற்றிய அச்சம் இன்று நாட்டில் உள்ள அனைவருக்கும் எழுந்துள்ளது. இந்த அச்சத்தை மக்களாகிய நாம் தான் முறியடிக்க முடியும்.

வரலாற்றுப் புனைவுகளுக்குள் சிக்குண்டு அள்ளுப்படாமல், வரலாற்று ஆய்வுகளின் ஊடாகப் பயணிப்போம். வரலாறு நம்மை மீட்கட்டும். நம்மை யார் என்று நமக்கும் பிறருக்கும் உணர்த்தட்டும். வரலாறு நமக்கு வழியை மூடிச் சிதைப்பதற்குப் பதிலாக வழிகளைத் திறந்து காட்டட்டும். வரலாறு நம்மை உலக அரங்கில் நிறுத்தட்டும். அந்த வரலாற்றை எழுது வோம்.

# குருந்தூர்மலை தொடக்கம் கஜேந்திரகுமார் வீடு வரை

(15ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பாக அமெரிக்கா உற்றுக் கவனிப்பதாகக் கூறியதாக ஒரு செய்தி வெளி வந்தது. அதில் அவர் இந்துத் தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் தொட ர்பாகவும் விசாரித்திருக்கிறார். தமிழ் ஊடகங்களில் கூறப்படுவது போல அவர் வெளிப்படையாக ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகளைக் குறித்து எதுவும் பேசவில்லையாம். மேலும் அவர் உரை யாடலின் போக்கில் குருந்தூர் மலை பற்றிச் சொல்லியிருக்கிறாரே தவிர அதை அமெரிக்கத் தூதரகத்தின் உத்தி யோகபூர்வ நிலைப்பாடாக ருவிற்றரில் பதி விட்டிருக்கவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மேற்கு நாடுகள்,ஐநா போன்றன சிங்கள பௌத்த மயமாக்கலைக் குறித்து வெளிப்படையாக உத்தியோகபூர்வமாக எதையும் தெரிவித்திராத ஒரு சூழலில், பிக்குக்கள் அதைச் செய்யும்போது அதைத் தடுக்காமல் விடுவது ரணி லைப் பொறுத்தவரை தற்காப்பானது. அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவருடைய வெற்றி வாய்ப்புக்களைப் பாதுகாப்பது.

# கை விடுகிறதா அமெரிக்கா?

முதலாவது கோர்ப்ஸ் தான் இலங்கை இராணுவத்திலேயே முதன்மையான படையணிகளை உள்ளடக்கியது.

53, 58 ஆவது டிவிசன்கள் மற்றும் விசேட படைப்பிரிவு, கொமாண்டோ படைப்பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி யது தான், முதலாவது கோர்ப்ஸ். இந்த நான்கு படைப்பிரிவுகளும், இறுதிக்கட்டப் போரில் பல்வேறு மனித உரிமை மீறல் களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. அதாவது பொறுப்புக்கூற வேண்டிய படைப்பிரிவுகள்.

இறுதிக்கட்டப் போருக்குத் தலைமை தாங்கிய அதிகாரிகள் பலர் இப்போது இந்தப் படைப்பிரிவுகளில் இல்லை. ஆனால், அப்போது பணியாற்றிய படை யினர் பலர், இன்னமும் இந்தப் படைப் பிரிவுகளில் இருக்கின்றனர். இவர்கள், பொறுப்புக்கூறலை எதிர்க்கின்றனர். ஏனெ ன்றால், அது அவர்களை சிக்கலுக்குள் தள்ளும். தண்டனைக்குட்படுத்தப்படும் நிலையையும் ஏற்படுத்தும்.

இதனைக் கருத்தில் கொண்டு கூட, அமெரிக்கத் தூதுவர் சிறுபான்மையின ங்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழு ப்ப வேண்டும் என்று குறிப்பிட்டிருக்க லாம். அதன் மூலம் நிலையான அமை தியை எட்ட முடியும் என்று மாத்திரம் அவர் கூற முன்வரவில்லை. அதற்கும் அப்பால், இராணுவத்துக்கான உதவிகளை வழங்குவதற்கும் அமெரிக்கா தயாராக இருக்கிறது அதற்கான தடைகளை அகற்றுங்கள் என்ற செய்தியும் இதற்குள் அடங்கியிருக்கிறது.

பொறுப்புக்கூறலை எதிர்பார்த்துக் காத்தி ருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அமெரிக்கத் தூதுவரின் இந்தச் செய்தி, ஏமாற்றத்தையே கொடுத்திருக்கும்.

# ஏன் மீண்டும் 13வது திருத்தச்சட்டம்......

(17ம் பக்கத் தொடர்ச்சி) முன் வைக்கின்றார். இவர்களின் இலக்கு வெற்றி பெற்றால் நடக்கப் போவது ஒன்று மட்டுமே. அதாவது, வசதியுள்ள மத்தியதரவர்க்கம் நாட்டை விட்டு வெளியேறி விடும். வசதியில்லாத மக்களே மிஞ்சுவர். அவர்கள் அரசாங்கத்தின் பக்கமே இறுதியில் சாய்வர்.

ஏனெனில் சோறே, அவர்களது பிரதான பிரச்சினையாக இருக்கும். ஆகக் குறைந் தது, 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சில விடயங்கள் அமுல்படுத்தப்பட்டால் ஓரளவு முன்னேறுவதற்கான அடித்தளம் உருவாகும். அடிப்படையில் இன்றைய சூழலில், எவரெல்லாம், இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, முன்னேறுவோம் என்று கூறுபவர்களை தோற்கடிக்க முயற்சிக்கின்றார்களோ, அவர்கள் தொடர்பில் அவ தூறுகளை பரப்புகின்றார்களோ, அவர்கள் அனைவருமே தமிழ் இன அடை யாளத்தை, சிதைத்து உருத்தெரியாமல் ஆக்கும் நீண்ட கால இலக்கின் முகவர் களாவர்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# யுத்தம் முடிவடைந்து 14 வருடங்களாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியோ தீர்வோ வழங்கப்படவில்லை -ஐ.நா.மனிதஉரிமை ஆணையர்!

யுத்தம் முடிவடைந்து பதினான்கு வருடங்களாகியும், அதனூடாக பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை, நீதி மற்றும் தீர்வு கிடைக்கவில்லை, மாறாக அவர்கள் வேதனைகளை அனுபவித்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் (Volker Turk) தெரிவித்துள்ளார். ஆணையாளர் வெளியிட்டுள்ள வருடாந்திர அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



பொறுப்புக் கூறல்களை நிறைவேற்றுவதிலிருந்து இலங்கை தொடர்ந்தும் தவறி வருவதாகவும், போர்க்குற்றங்கள், அண்மைய மனித உரிமை மீறல்கள், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றின் மூலம் பொறுப்பு கூறல்கள் மீறப்பட்டுள்ளமை நன்கு புலப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு முன்னோக்கிச் செல்வதற்கு இந்த விடயங்கள் பாரிய தடையாக இருப்பதாகவும் அது தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்பட வேண்டுமென மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

எந்தவொரு நிலைமாறுகால நீதிச் செயல்முறையும் வெற்றியடைவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கான உண்மையான முயற்சிகளால் அடித்தளம் அமைக்கப்பட வேண்டும்.

இந்த பொறிமுறையின் ஊடாக உண்மையைத் தேடுவது மட்டுமன்றி பொறுப்புக் கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்கு மாற்றத்தை செயல்படுத்துவதற்கான அரசியல் விருப்பத்துடன் இருக்க வேண்டும்.

இதேவேளை ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான வழக்குகள் மீதான விசாரணைகள் மற்றும் வழக்குகளை துரிதப்படுத்தப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் மற்றும் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் சட்டம் உட்பட முன்மொழியப்பட்ட புதிய சட்டமூலங்கள் தொடர்பான பல கவலைகளையும் அந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது. நல்லிணக்க முன்முயற்சிகளை முன்னெடுப்பதில் அதிபர் வித்தியாசமான தொனியை வெளிப்படுத்தியுள்ளதாகவும், உள்ளூர் மோதல்கள் மற்றும் பதற்றங்களுக்கு காரணமாக உள்ள தொல்பொருள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துவதை நிறுத்துவதாக அவர் உறுதியளித்துள்ளதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

அத்துடன், 2021ஆம் ஆண்டில் 13 சதவீதமாக இருந்த இலங்கையின் வறுமை விகிதம் 2022 ஆம் ஆண்டில் 25 சதவீதமாக இரு மடங்கு அதிகரித்துள்ளது. இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும் அதன் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் சர்வதேச நிதி நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகம் ஆதரவளிக்கும் அதேவேளை நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் உண்மையான முன்னேற்றத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசியல் பங்கேற்புக்கான உரிமையையும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் மூலம் வாக்காளர்களின் சுதந்திரமான கருத்துரிமையை அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு வருடத்திற்கு முன்னர் நடைபெற்ற மக்கள் போராட்டங்கள், இலங்கையில் சிறந்த நிர்வாகத்துக்கான பார்வையை ஏற்படுத்தியிருந்தது. எனினும், தற்போது அதற்கான சாத்தியங்கள் உணரப்படவில்லை எனவும் அவர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். அதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு வருடத்துக்கு முன்னர் இடம் பெற்ற பாரிய மக்கள் போராட்டங்களை கருத்தில் கொண்டு, வரலாற்று மாற்றத்தின் சவால்களை யதார்த்தமாக்குவதற்கு அர்ப்பணிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்று அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அவ்வாறானதொரு பொறிமுறைக்காக உண்மையான பின்னணியை தயார் செய்ய வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கொள்கைக்கு முரணானது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன் மொழியப்பட்ட உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்ட மூலமானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் 19-3 பிரிவு மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

